# அலை

24

பங்குனி 1984

ரூபா 3-50

## இன்று இல்லையெனினும் நாளை

எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன.
எங்கள் இமைகள் கவிந்துள்ளன.
எங்கள் உதடுகள் அண்டியுள்ளன.
எங்கள் பற்களும் கண்டிப்போய் உள்ளன.
நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்.
எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக.
எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக.
எங்கள் முதுகில் கசையால் அடிக்குக.
எங்கள் முதுகுத்தோல் பிய்ந்துரிந்து போகட்டும்.
தாழ்ந்த புருவங்கள் ஓர்நாள் நிமிரும்.
கவிந்த இமைகள் ஒருநாள் உயரும்.
இறுகிய உதடுகள் ஒருநாள் துடிதுடிக்கும்.
கண்டிய பற்கள் ஒருநாள் நறநறக்கும்.
அதுவரை நீங்கள் எங்களை ஆள்க.
அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக.

சண்முகம் சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையின் இலக்கியப் பணிக்கு

எமது வாழ்த்துக்கள்

234 236, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

புதிய நிர்வாகத்தில்

தரமான ஆசிரியர் குழுவினரோடு

யாழ் நகரின் புகழ் மிக்க கல்வி நிறுவனம்

LAW CENTRE

B. M. C. LANE,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோக்கிய படை நடப்பு

தெலுங்கில் : ஸ்ரீ. ஸ்ரீ.
ஆங்கிலம் வழியாகத்
தமிழில் : மணி

அலைபாய்கிறது,
மணி ஒலிக்கிறது,
இன்னேருலகின் குரல்அழைக்கிறது.
பாய்குது ஒலிக்குது அழைத்திடுகிறது.
முன்னே நடப்பீர்,
ஓ! முன்னுற விரைவீர்;
மேலும் முந்தித் திரள்வோம் என்றும்.

எங்கள் ஜீவன் கீதமிசைக்க
விரைவோம். பாய்வோம்.
துள்ளும்எம் நெஞ்சம் குறிக்கோள் சேரும்
தேர்வு தெளிகுது.
நேரம் நெருங்குது,
இன்னேருலகின் அழைப்பு இனியது,
இன்னேருலகின்
அருவியின் அழைப்பால்
குதூகலமுடனே முன்னே நடப்போம்.

வெள்ளமாக எங்கள் குருதி
வீதியனைத்தும் ஊற நனைக்கும்.
ஆழ்கடல் தாவிக்
கரைகளனைத்தும் ஆளுமை செய்வோம்.
புவியியல் தன்னை மாற்றியமைப்போம்,
புதுவரலாறு ஒன்று படைப்போம்.
பாலையும் காடும் மலையும் நதியும்
முன்னோக்கிய நம்படை நடப்பதனை
நிறுத்திட மாட்டா, திருப்பிட மாட்டா.
கிழக்கும் மேற்கும் வடக்கும் தெற்கும்
வாலிப சக்திகள்,
கழுகு சிங்கம் வேட்டை நாய்களாய்
எத்தர் புரட்டர்கள் கோட்டையை
எதிர்க்கும்.
பழமை பேணுவோர் பத்தாம் பசலிகள்
தோல்வி காணுவர்: கூண்டில் ஏறுவர்.

இளமைக் குருதி
எதிர்காலத்தின் கனலைமூட்டும்.
விழித்த வாலிபம் நடைபோடுகுது.
புதிய உயிர்கள் கோபுரமாக.

முன்னே பாய்வீர்
முன்னுறச் செல்வீர்.
இன்னேருலகின் வரவை உரைப்பீர்.
மணியொலி இசையும்
இன்னேருலகின் முரசின் ஒலியும்
உந்தன் செவியில் ஏறவில்லையா?

வாழ்க தோழர்காள்!
போய்க்கடந்த சகாப்தமொன்றன்
பயன் இல்லாத தூசையும் அழுக்கையும்
பழித்துரை செய்வோம்.
காணுக நம்முன்
மனித இனத்தின் உள்ளொளி மூட்டிய
உன்னதமான அக்கினிக் கோபுரம்.

சீறும் பாம்புகள் போல வருக,
வேட்டை நாய்கள் போல வருக,
தனஞ்சயன் போல உலகை வெல்க.
விடியலை வாழ்த்துக.
கொம்புகள் ஒலிக்குக.

புதிய சத்ய பூமி ஜனிக்கும்.
ஒன்று சேர்ந்து பாடல் இசைக்குக.
நம்முன் புதுவுல குள்ளது உள்ளது.
முன்னே முன்னே.

அதனுடை எழில்மிகும்
அக்கினி முடியிலும்
அதனுடை விடியலின்
உன்னதம், சிவந்தகொடியிலும்
விந்தை—
காலத்தினது ஹோமாக்கினி போல்!

(சுருங்கிய மொழி பெயர்ப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை என்றால் என்ன?

றெஜி சிறிவர்த்தனா

மனிதனால் ஆக்கப்படும் சில பொருட்கள் கலைப்படைப்புக்கள் என்றும் ஏனையவை கலைப் படைப்புக்கள் அல்ல என்றும் எம்மில் பெரும்பாலோர் முன் ஆய்வின்றியே நினைப்பதுண்டு. இந்த இரண்டு வகைகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு இருவகை நுதல் பொருள்களின் தன்மைகளிலுள்ள உள்ளார்ந்த வேறுபாட்டினை ஒத்திருக்கிறது என்றும் கருதுகிறோம். ''பேத்தோவன்'' கலை, ''பைலா'' கலையல்ல, ''கலியுகய'' கலை ''கௌதராஜா'' கலையல்ல, இவையையும் இத்தகைய எதிரீடுகளையும் மிகப் பலர் கேட்டுக் கேள்வியின்றியே ஏற்றுக் கொள்வர். இத்தகைய எதிரீட்டுச் சோடிகளிலிருந்து கலைக்கும் கலை அல்லாதவற்றிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் குறித்து தர்க்க முரண்பாடற்ற, ஒத்திசைவான கொள்கையைப்பற்றி அனுமானிக்க முற்படும் பொழுதுதான் நாம் 'வில்லங்கத்'திற்குள் மாட்டிக் கொள்கிறோம்.

இத்தகைய இன்னொரு எதிரீட்டுச் சோடியினைப் பார்ப்போம். வீட்டுச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் சீனப் பொர்சலின் பூச்சாடி கலை எனக் கொள்ளத்தக்கது போலும். கெலணியாவில் ஆக்கப்பட்டு சமையலறையில் வைக்கப்பட்டிருக்கும் மட்பானை கலை எனக் கொள்ளத்தக்கதொன்றல்லப் போலும். இதிலிருந்து, கலைக்கும் கலை அல்லாதவற்றிற்கும் இடையேயுள்ள வேறுபாடு ஒன்றின் பயன்பாட்டுத் தன்மைக்கும் மற்றதன் பயன்பாடற்ற அலங்காரத் தன்மைக்கும் இடையேயுள்ள வேறுபாடென நினைக்கத் தூண்டலாம். ஆனால் இத்தகைய வேறுபாடு இளப்பிவிடக்கூடிய சங்கடமான நுட்பநுணுக்கம் வாய்ந்த கேள்விகளைத் தவிர (றிச்சட் பீரிஸ் கொம்பனியால் ஆக்கப்படும் றபர்ப் பூச்சாடி ஒரு கலைப் படைப்பா? இல்லையா?), நகரச் சுற்றுப்புறத்தில் வாழக்கூடிய ஸ்ரீலங்கா இல்லத்தரசி குசினிக்குள்ளே உதாசீனமாக ஒதுக்கிவைக்கும் இதே மட்பானையை ஒரு அமெரிக்க உல்லாசப் பயணி வாங்கி தனது தாய்நாட்டிற்கு கொண்டுசென்று தனது அறையில் அதனை ஒரு அலங்காரப் பொருளாக வைத்திருக்கக்கூடும். இதிலிருந்து, கலையெனக் கருதப்படுவதற்கும் கலை அற்றதென கருதப்படுவதற்கும் இடையேயுள்ள வேறுபாடு பொருட்களின் உள்ளார்ந்த தன்மையைப் பொறுத்ததல்ல; வெவ்வேறு சமூக நடைமுறைகளோடும் பொருட்களை மக்கள் வெவ்வேறு வழிகளில் பயன்படுத்துவதோடும் அவ் வேறுபாடு தொடர்புற்றிருக்கின்றது என்பதை இது சுட்டுகிறது. ஒரே பொருள் வெவ்வேறு சமூகச் சூழ்நிலைகளில் கலைப் படைப்பாகவோ அல்லது கலைத்தன்மையற்ற பொருளாகவோ கருதப்படுவதை நாம் மேலே கண்டோம்.

இக் கருத்தினை வேறு உதாரணங்களினூடாக அரண்செய்ய விரும்புகிறேன். முற்காலத்திலே படைக்கப்பட்டு இன்றுமாபெரும் கலைப் படைப்புக்களாக மெச்சப்படும் பல பொருட்கள், அவை படைக்கப்பட்ட காலகட்டத்தில் பற்றற்ற அழகியல் சுவைப்புக் கண்ணோட்டத்துடன் நோக்கப்படாது சமூக செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. கல்விகாரைப் பௌத்த சிற்பங்களும் ''சிஸ்ரைன்'' தேவாலயச் சுவர் ஓவியங்களும் அவை ஆக்கப்பட்ட சமுதாயங்களில் வழிபாட்டிற்கு உதவும் துணைச் சாதனங்களாய் விளங்கின. மகாபாரதமும், இலியத்தும் அரசவைகளில் இசைக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது அக்காவியங்களை முதன் முதலில் செவியுற்ற ஆளும் வாக்கத்தினர், தமது மூதாதையரின் வீரச் செயல்களை விதந்துரைக்கும் புகழாரமாக அவற்றினைக் கணிப்பதை விடுத்து இலக்கிய உணர்வுச் செவ்வியின் வெளிப்பாடுகளாக அவற்றினைக் கொண்டனர் எனக் கருதுவதற்கு ஆதாரமில்லை.

உண்மையில், ''அழகியல் சார்ந்த அனுபவம்'' என்றதொரு தனிவேறு துறையை உருவாக்கி அத்துறையினுள் ''கலைப்படைப்புக்கள்'' என்ற சிறப்பு வகைப் பொருட்களை அடக்கும் வழக்கு 19ம் நூற்றுண்டிற்கு முற்பட்டதல்ல. ஐரோப்பிய பூர்சுவா நாகரீகத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இவ்வழக்குத் தோன்றி உலகெங்கும் பரப்பப்பட்டது. அவ்வழக்குடன் அந் நாகரீகத்திலிருந்து பிறந்த சமூக உறவுகளும் உலக நோக்கும் அவ்வாறு பரவிற்று. வேறுவகையாகக் கூறுவதானல், கலைக்கும் கலை அல்லாதவற்றிற்கும் இடையேயுள்ள எதிரீடு சுட்டிப்பான, திட்டவட்டமானசமூக நடைமுறைகளின் உற்பத்தி மட்டுமல்ல; அது ஒரு சுட்டிப்பான திட்டவட்டமான கோட்பாட்டிலிருந்து ஊற்றெடுத்த நடை முறைகளின் விளைபொருளுமாகும். பூர்சுவா உறவுகளுக்கு முற்பட்ட சமுதாயங்களில் கலை பற்றிய ஒரு கருத்தாக்கம் இருந்தது. அதன்படி கலையென்பது ஒரு உத்தியமாக, ஆற்றலாக கருதப்பட்டது. இத்தக் கருத்துருவம் வழிபாட்டிற்கு செதுக்கப்படும் ஒரு கற்சிலைக்கும் பொருந்தும்அதே வேளை குசினியிலே பயன்படுத்தப்படும் அகப்பைக்கும் பொருந்தும். வேடிக்கை என்னவென்றல், காலனித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் கண்டிய கைவினைஞர்களால் ஆக்கப்பட்ட இத்தகைய அகப்பைகள் இன்று பொருட்காட்சிச் சாலைகளில் கலைப்படைப்புக்களாக மெச்சப்படுதலே.

பூர்சுவா கைத்தொழில் நாகரீகத்தில், கலைக்கும் கலை அல்லாதவற்றிற்கும் இடையே எதிரீடு காண விழைந்ததன் காரணத்தைப் புரிவது எளிது. அந்நியமயப்படுத்தப்பட்ட மனித உழைப்பால் உற்பத்தி செய்யப்பட்டு தனியார் லாபத்திற்காக பரிமாற்றப்பட்ட பொருட்களுக்கும், தன் வெளிப்பாட்டிற்காகவே அர்ப்பணிப்புமிக்க கலைஞர்களால் ஆக்கப்பட்ட படைப்புக்களுக்குமிடையேயுள்ள எதிரீடே இது. இவ் எதிரீட்டினை இவ்வாறுதான் கோட்பாட்டாக்கம் விளக்க முற்பட்டது. தனது ஒய்வு நேரத்தை கொஞ்சப் பண்பாட்டின் மூலம் இனிப்பூட்ட முயன்ற களைப்புற்ற வியாபாரியையும், ஆலைச் சங்குகளினதும் நீராவி இயந்திரங்களினதும் அலறல்களைக் கேட்காத வண்ணம் தமது கதவுகளை அடித்துச் சாத்திய 'எதிர்ப்புக்' கலைஞர்களையும் இந்தக் கோட்பாட்டாக்கம் தன்னுள் இசைவுபடுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்தது. கலைக்கும் கலை அல்லாதவற்றிற்கும்இடையே நிலைநாட்டப்பட்ட எதிரீடு 19ம் நூற்றுண்டில் ஓரளவு நியாயமானதாய் இருந்தது. ஏன் மார்க்ஸ் கூட இவ் எதிரீட்டினை ஓரளவு ஏற்றுக் கொண்டார். பியானேக்களைச் செய்பவர்களுக்கும் பியானேவை வாசிப்பவர்களுக்கும் இடையே அவர் பொருளாதார வேறுபாட்டினைக் கண்டார். ஆனல் இவ் எதிரீடு 20ம் நூற்றுண்டு யதார்த்தத்தோடு வரவரப் பொருந்தாத ஒன்றுய் காணப்படுகிறது. 'கலை'க்கும் 'பொதுசனத் தொடர்புச் சாதனங்களு'க்குமிடையில் பொதுவாக ஒப்புக்கொள்ளப்படும் வேறுபாட்டில் யதார்த்த நிலையும் இட்டுக்கட்டான புனைந்துரையும் பிரிந்து செல்லுதல் துலாம்பரமாகத் தெரிகின்றது. இவ்விருவகைப்பாடுகளும் உள்ளடக்கும் பணபாட்டுப் பண்டங்கள் இன்று நிலவும் உற்பத்தி, விநியோகப், பரிமாற்று உறவுகளுக்கு உட்பட்டவையே.

இவ் வேறுபாட்டிற்கு ஒரு 'புறநிலையான' அடிப்படையைக் காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். நாவல்கள், நாடகங்கள், கவிதைகள், ஓவியங்கள், இசையாக்கங்கள் 'கலை'; பத்திரிகைகள், வானெலி, திரைப்படம், தொலைக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை 'தொடர்புச்சாதனங்கள்'. ஆனால் இது 'எடுபடாது': விமர்சன நோக்கில் சில நாவல்கள், சில திரைப்படங்கள், சில இசையாக்கங்கள். கலையாக்கங்கள் எனக் கொள்ளப்படுவது தெளிவு. ஏனையவை கலை அல்ல எனக் கொள்ளப்படுகிறது. வெர்ஜினியா வூள்வின் நாவல்களுக்கும் ரோஸ்மேரி ரோஜேசின் நாவல்களுக்குமிடையே உய்த்துணரக்கூடிய வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. வூள்வின் நாவல்களை விட ரோஜேசின் நாவல்களை கூடுதலான மக்கள் வாசிக்கின்றனர் என்ற மெய்ம்மையுடன் இவ்வேறுபாடுகள் தொடர்புற்றுள்ளன. ஆனால் குறைந்த வாசகர் வட்டம் இருப்பதனால் மட்டும் வெர்ஜினியாவூள்வ் கட்டாயமாக ரோஜேசை விட சிறந்த கலைஞர் என்பதற்கில்லை: லீவிசும் அவரது சீடர்களும் முன்வைத்த 'பாமரர் நாகரீகம் எதிர் சிறு குழுவினரின் பண்பாடு' என்ற கருத்தில் இத்தகைய தொனியைக் கேட்கலாம். இக் கருத்தின்படி, மிகப் பெருவாரியாக விற்பனையாகும் நூல்கள், விளம்பரங்கள், ஜனரஞ்சகப் பத்திரிகைகள், சினிமா, தொலைக்காட்சி ஆகியவை மேன்மையான மனித விழுமியங்களை இழிவுபடுத்தி அழிக்கின்றன. சிறுகுழுக் கலையே இவ் விழுமியங்களைப் பேணி வளர்த்து அவற்றிற்கு ஊட்டம் அளிக்கின்றது. இந்த நிலைப்பாடு ஒரு உண்மையினைப் புறக்கணிக்கின்றது: மிகவும் மெச்சப்படும் சிறு குழுக் கலையாக்கங்கள் சில மிகப் பிற்போக்கான விழுமியங்களுக்கு ஊடகங்களாக இருக்கமுடியும். T. S. எலியட்டின் கவிதைகளில் காணப்படும் யூதர் இன வெறுப்பும் உயர் சமூக நிலைக்கு அடிபணிந்து அதீத மதிப்பு கொடுக்கும் போக்கும், D.H. லோறன்சின் நாவல்களிலே காணப்படும் பாசிச தலைவர் வழிபாடும், ஆணுதிக்கக் கோட்பாடும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுக்கள். கலைத் துறையில் நுண்ணிய வேறுபாடு காணும் திறமையையும் அறவொழுக்கத் துறையில் நுண்ணிய வேறுபாடு காணும் திறமையையும் லீவிஸ் எளிமையாகச் சமன்படுத்தியமை அனுபவ உரை கல்லில் பொய்ப்பிக்கப்படுகின்றது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் அலைவரிசை இரண்டினையும், தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் ஜனரஞ்சக நிகழ்ச்சிகளையும் வெகுவாக ரசிப்பவர்கள் 1983 ஜுலை மாதத்தின் இறுதி வாரத்தில் மனிதாபிமானத்தோடும் துணிச்சலோடும் நடந்து கொண்டனர். மேம்பட்ட அழகியல் ரசனை வாய்ந்தவர்கள் அவ்வாறு நடக்கத் தவறிவிட்டனர். (சுட்டிப்பான உதாரணங்களை எனக்குத் தெரியும்.)

இக் கட்டத்தில் யாராவது ஒரு வாசகன் சொல்லக் கூடும்: கலைக்கும் கலை அல்லாதவற்றிற்கும் இடையேயுள்ள வேறுபாடு மிக எளிமையானதுதானே. கலை கற்பனைத் துறையினை, புனைவினைச் சார்ந்தது. கலை அல்லாதது விஞ்ஞானம் தகவல் மெய்ம்மைப் பதிவுத் துறையைச் சார்ந்தது. ஆனால் கற்பனைத் துறைக்கும் மெய்ம்மைத் துறைக்குமிடையே முரண்பாடின்றிக் கோடு வரைவது சாத்தியமில்லை. மார்க்சினுடைய 'மூலதன'த்தைப் படிக்கும் ஒரு வாசகன் அதனை பொருளாதார கோட்பாட்டு, பொருளாதார வரலாற்று நூலாகக் கொண்டு விஞ்ஞான நூலாக அதனைக் கருதலாம். இன்னொரு வாசகன் அதனை இலக்கியப் படைப்பாக நோக்கக் கூடும். ('மூலதன'த்தில், காணப்படும் உருவகக் கற்பனை நயத்தைப் பற்றியும் அதன் நடையின் வலிமை பற்றியும் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.) மறுபுறம், காலைத் தினசரியும் தொலைக்காட்சியின் செய்தி நிகழ்ச்சியும் ஒப்புவிக்கும் 'மெய்ம்மை' பெரும்பாலும் இட்டுக்கட்டான புனைவாக்கமே. தேர்வு, அடுத்தடுத்து வைத்தல், அழுத்தம், மிகைப்படுத்துதல் போன்ற உத்திகளின்மூலம், அவை பிரதிவிம்பம் செய்வது போல் தோற்றும் 'மெய்ம்மை' 'ஆக்க'ப் படுகின்றது. விவரண திரைப்படத்துறையின் வரலாற்றிலே இதற்கு ஒரு தீவிர எடுத்துக்காட்டு லெனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிய வென்ஸ்ரோலின் 'சித்தத்தின் வெற்றி' இப் பெண்மணி ஹிட்லரின் நியூரன்பெக் அணிவகுப்பு ஒன்றினை படம் பிடித்தார். ஆனல் கமெரா நிலைப்பாடுகளுக்கு அமையவே அணிவகுப்பு நடாத்தப் பட்டது.

ரூஷிய உருவவாதிகளும் பிராக்கில் நிலை கொண்டிருந்த அமைப்புமொழியியலாளரும் இந்தநூற்ருண்டின் முற்பகுதியில் கலைக்கும் கலை அல்லாதவற்றிற்குமிடையே உருவம் சார்ந்த அளவு கோள்களின் அடிப்படையில் வேறுபாடு காணத் தலைப்பட்டனர். உண்மையில், அவர்கள் இலக்கியம் பற்றியும் குறிப்பாகக் கவிதை பற்றியுமே அக்கறை கொண்டிருந்தனர். எனினும் இந்த அணுகுமுறை வேறுவடிவங்களுக்கும் பொருத்திப் பயன்படுத்தக் கூடிய உள்ளார்ந்த தன்மைகளைக் கொண்டது. சுட்டிக்கும் சுட்டப்படுவதற்கும் இடையே சொஸ்சுயர் கண்ட வேறுபாடினைப் பயன்படுத்தி (சொல்லும் அதனுடன் தொடர்பு படுத்தப்பட்டிருக்கும் கருத்துருவமும்), இந்தக் கோட்பாட்டாளர் கவிதையின் இன்றியமையாக் கூறு அது சுட்டிகளை முன்னிலைப்படுத்துதலே எனக் கண்டனர். கவிதையில் வரும் ஒரு சொல் வெறுமனே கருத்தைத் தாங்கி வரும் கண்ணுடித் தன்மை வாய்ந்த வாகனமல்ல; சுட்டப்படுவதற்கு பரிமாற்றப்படும் ஒரு பொருள் அல்ல. சொல்லின் பருப்பொருள் சாாந்த யதார்த்தமும்—அதன் ஒலி வடிவமும் இழை அமைப்பும்—யாப்பு,சார்ந்த தாளலயம், சார்ந்த சொற்ருெடர்பு சார்ந்த, சொற்பொருள் சார்ந்த அமைப்புக்களுக்கிடையே உள்ளகுறுக்குமறுக்கான பின்னலுமேமொழியின்கவித்துவ மட்டத்தின்உள்ளார்ந்தஉயிர்க் கூறுகள் என உருவவாதிகளும் அவர்களை அடியொற்றியவர்களும் தருதினர். கட்புல, செவிப்புல ஊடகங்கள்பாற்பட்ட குறியீட்டு அமைப்புக்களை உள்ளடக்கும் பொருட்டு இந்தக் கோட்பாடுகளை விரிவாக்கி பொருத்தி, கலைபற்றிய ஒரு பொதுக் கோட்பாட்டினை உருவாக்குதல் எளிது. ஆனல் மீண்டும் இங்கு நாம் ஒரு கலைப்பொருளின் உள்ளார்ந்த தன்மைகளுடன் அல்ல, சில குறிப்பிட்ட வாசிப்பு, நோக்குதல், கேட்டல், முறைகளோடேயே தொடர்பு கொள்கிறேம். இந்த முறைகளை நாம் கையாளலாம் அல்லது கைவிடலாம்; அது நாம் ஈடுபட்டிருக்கும் சமூக நடைமுறையில் தங்கியுள்ளது. மேலும், வழக்கமாக கலை என நாம் கருதாத பொருட்களை பொறுத்தவரையிலும் கூட இந்த சாத்தியங்கள் அடிக்கடி ஏற்படுவது உண்டு. எடுத்துக்காட்டாக சிங்கப்பூர் விமானச்சேவை விளம்பரத்தை எடுத்துக்கொண்டால் ஒரு வருக்கு அச்சிறு திரைப்படத்தின் தொகுப்பிலும் படிமங்கள் இணைக்கப்பட்டுள்ள முறையிலும் கட்புலன் சார்ந்த இன்பம் ஏற்படலாம். அவருடைய அனுபவத்தில் சுட்டிகள் உண்மையில் முன்நிலைப்படுத்தப் பட்டுள்ளன இன்னெருவர் அதன்மேலீடான செய்தியால் உந்தப்பட்டு தொலைபேசி மூலம் இவ்விமானச் சேவையில் உடனடியாகப் பிரயாணம் செய்வதற்கு ஒரு ஆசனத்தை ஒதுக்கிக் கொள்ளலாம். மூன்ருமவர், வெளிப்படைத்தோற்றங்களை ஊடறுத்துஇட்டுக்கட்டான புனைந்துரையை இனங்கண்டு, பெண்மை படிமத்தை எவ்வாறு இந்த விளம்பரம் பயன்படுத்துகிறது என்பதைக் காண்பார். பண்பாட்டு ஆக்கங்கள் எவ்வாறு பல்வேறுபட்ட பயன்பாடுகளுக்கு சமூக நிகழ்வுத் தொடரில் உட்படுகின்றன என்பதை மீண்டும் இங்கு நாம் எதிர் கொள்கிறேம். இது சிங்கப்பூர் விமானச்சேவை விளம்பரங்ளுக்கு மட்டுமல்ல சேக்ஸ்பியருக்கும் பொருந்தும். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு அமெரிக்க ஆய்வாளர் முதலாவது 'போளி'யோவின் ஏறக்குறைய எழுபது பிரதிகளை பக்கம்பக்கமாக நுணுகி ஆராய்ந்தார். புத்தகம் எவ்வாறு அச்சடிக்கப்பட்டது, பிழைதிருத்தம் எவ்வாறு செய்யப்பட்டது என்பவற்றை நிறுவ விழைந்த இவர், சேக்ஸ்பியரின் நாடகங்களை 'கலை' யாக அனுகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, கலையும் கலை அல்லாதவையும் ஒன்றையொன்று விலக்கிவைக்கிற வகைப் பாடுகள் என்ற தொனியில் பேசுவதை நாம் நிறுத்தி, பதிலாக தொடர்பு கொள்ளும் முறைகள் பற்றிப் பேசுவதே சாலப் பொருந்தும். இந்தத் தொடர்பு கொள்ளும் முறைகளுக்கிடையே பல்வேறுபட்ட உறவுகளையும், வேறுபாடுகளையும் நாம் நிறுவலாம். அது நாம் ஈடுபட்டிருக்கும் செயல்பாட்டையும், ஒரு பண்பாட்டுப் பொருளுடன் நாம் தொடர்புகொள்ளும் நோக்கங்களையும் பொறுத்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலையில் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப் பட்ட பொருள் பெயர்த்தெடுக்கப்பட்டு பிறிதொரு சூழ் நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டதும், அது முற்றிலும் வேறுபட்ட பயன்பாடுகளுக்கு உட்படுத்தப்படலாம் என்பதை நாம் நினைவு கொள்ள வேண்டும். பலநூற்றாண்டுகளுக்கு முன்னர்ஸ்கொட்டிஸ் உழவர்களினால் அறுவடைக் காலத்தில் பாடப்பட்ட நாட்டுப் பாடல் அச்சேறிய வடிவத்தில் பெரதெனியா வகுப்பறையொன்றில் கூறு கூறுகப் பகுத்தாயப்படலாம்: மாணவர் அதனை நடைமுறை விமர்சனப் பயிற்சிக்கு பயன்படுத்தலாம். இலக்கியத்தை ஒரு துறையிலும், நுண்கலைகளை இன்னொரு துறையிலும், தொடர்புச் சாதனங்களை இன்னொரு துறையிலும் பிரித்தொதுக்கியுள்ள கல்விசார் நிறுவனங்களுக்கு இந்த வேறுபாடுகள் புறநிலை யதார்த்தத்தைச் சார்ந்தவை என்பதை நிறுவிப் பேணுதல் இன்றியமையாததே. ஆனால் இதுவும் சில குறிப்பிட்ட சமூக நிறுவனங்களின் நடைமுறைகளுக்கு உதவும் கோட்பாடு சார்ந்த ஒரு கருத்துருவாக்கம் என்பதை நாம் இனங்கண்டு கொள்ள வேண்டும்.

நன்றி: லங்காா கார்டியன்
தமிழாக்கம்: ஏ. ஜே. க.

## அற்பங்கள்

அற்ப நிகழ்வும்
அர்த்தம் அற்றதும்
என்னுடன் வருக.

உதிரும் மணலும்
உருவழியும் நீர்வரையும்
எனது உவப்புகள்.

மங்கல் நிலவும்
மாலைக் கருக்கலும்
விடியற் கலங்கலும்
எனது விருந்துகள்.

ஒன்றுமிலா வெளியும்
உதிர்ந்து விழும் இலையும்
நெஞ்சை முழுதும், நிரப்பிக்
கொள்ளும்.

பாதையின் ஓரம் படரும் சிறுபுல்லும்
கானகத்தில் எங்கோ
கண்பவரும் ஓர்பூவும்
போதும் எனக்கு.
(பற்றதெலாம் போக)

அற்ப நிகழ்வும்
அர்த்தம் அற்றதும்
என்னுடன் வருக.

சண்முகம் சிவலிங்கம்
(6-6-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசோகவனங்கள்

உமா வரதராஜன்

நீதானே அது?
அது நீயாய் இருக்கும் என
ஏன், எனக்கித்தனை சந்தோஷம்?

கிழக்கெனவும்
மேற்கெனவும்
கிளம்பிச் சென்ற நாம்
உலகம் உருண்டை என்பதாலோ
மறுபடியும் சந்தித்தோம்?

கிழக்கு நோக்கிக்
கிளம்பிச் சென்றும்
மேற்கு வானில்
எத்தனை வட்டங்கள்
என் மன ஆலாவே!

தெரு வளைவைக்
கடக்கும் போது,
தூரத்தே
பாலகர்க்குப் பாடம்
சொல்லிக்கொடுக்கும்
ஒரு பாலகியாய்
ஜன்னலின் பின்னால்
உதித்த முகம்
நீதானே அது?
அது நீயாய் இருந்தால்
எனக்கெத்தனை சந்தோஷம்.
எனதன்பே, அசோகவனங்கள்,
எங்கே அழிந்தன?

இந்தக் கவிதையை எழுதிய மஹாகவிஞன் வழக்கம் போல் 7-50க்கு பஸ்ஸில் இந்த இடத்தைக் கடந்து போய்விட்டான். பஸ் ஒன்றின் இரைச்சல் கேட்டதும் ஆரம்பித்த படபடப்பு பஸ்ஸில் அவன் கடந்து போனதும் அடங்கிப் போயிற்று. அவனைப் பலவந்தமாக அந்த பஸ் என்னிடமிருந்து பிடுங்கிச் செல்வது போன்ற அசட்டுக்கோபம்; சோகம்

அவன் ஒட்டகச்சிவிங்கியைப் போல தலையை வெளியே நீட்டியபடிதான் இன்றும் போனான். தினமும் பதினாறு மைல்கள் பயணம் செய்வது இந்தப் பத்துவினாடி சந்திப்பு சுகத்துக்காகத்தான் என்று ஒருதடவை அவன் என்னிடம் சொன்னான்.

என்னைப் போல அவனும் கனவுகளுடன் வாழ்ந்து, மல்லுக்கட்டி, கனவுகளாய்க் கழிப்பான் என நான் நம்பத்தயாரில்லை. அவனுடைய காலடியில் முகம்புதைத்து காலமெல்லாம் கண்ணீர் அபிஷேகம் செய்யும் தொனிபட சற்று உணர்ச்சி வசப்பட்டு ஒரு தடவை நான் எழுதிய கடிதமொன்றுக்குப் பதில் எழுதுகையில் அவன் எவ்வாறு தொடங்கி இருந்தான் தெரியுமா? அன்புள்ள ஆண்டாளுக்கு அல்லது மீராபாய்க்கு....

கடந்த திங்கட்கிழமை கூட அவனுக்கு ஒரு கடிதம் எழுதினேன் வேகமாக. அது விடுதியில் இருக்கும் ஒரு சிறுபிள்ளை தன் சாப்பாடு, குளிப்பு, படுக்கை, படிப்பு .... இவை பற்றியெல்லாம் கோள் சொல்லி தன்னுடைய பெற்றோருக்கு எழுதுவது போல் இருந்தது. வாசித்துப் பார்த்ததில் எனக்கே பெரிய வெட்கமாகி விட்டது. அவனுக்கு இந்தக் கடிதம் எப்படி இருந்திருக்கும்? So, கிழித்து விட்டேன்.

Fileகள் நிறைந்த மேசையொன்றை நடுவில் வைத்து எதிரும்புதிருமாக உட்கார்ந்தபடி ஒரு சாயங்காலத்தில் நானும் அவனும் பேசிக்கொண்டிருந்த போது அவனுடைய கைகளைப்பற்றி நம் துன்பங்களுக்கு எப்போது விடிவு கிடைக்கப் போகிறது? என்றேன். சற்று நேரம் சும்மா இருந்து விட்டு பின்னர் என்னைப் பார்த்தபடி சொன்னான். ''நேற்று இரவு ரூபவாஹினியில் போன ஒரு தமிழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தில் இதே வசனம் வந்ததாக ஞாபகம் படுக்கையிலிருந்த என்காதில் அது விழுந்தது'

அவன் கனவுகளுக்கும், தமிழ்ப்பட வசனங்களுக்கும் எதிரி என்றால் பதினாறு மைல்கள் பயணம் செய்து பத்துவினாடி 'தரிசனமும்' திருப்தியும் பெறுகிற சமாச்சாரம் எதில் சேர்த்தி? மூளைக்கும் மனதுக்கும் நடைபெறும் கயிறுழுப்புப் போட்டியில் இவன் கழுத்து சிக்கிக் கொண்டதோ? அவன் கட்டவிழ்த்து விட்ட நாய் எம்பிக்குதித்து அவன் குரல்வளையைக் குறி வைக்கிறது.

நான் செய்த பெரிய பாவம் அவனைக்கேட்காமலேயே விரும்பத் தொடங்கியதும், ஆசைகளை வளர்க்க ஆரம்பித்ததும்தான். இருள் நிறைந்த நடுக்காட்டில் தனித்து இருப்பது போல் உணர்கிறேன். அவனில்லை, அவனது சத்தத்தை மட்டும்தான் என்னால் கேட்கமுடிகிறது. ...''கண்மணி, பயப்படாதே... நான் இருக்கிறேன்.'' என்றான். ஆனால் அவன் எங்கே இருக்கிறான், நான் இருக்குமிடத்தை அவன் கண்டு கொள்ளல் சாத்தியமா?ஒவ்வொரு நிமிஷங்களையும் முட்களாகப், பயங்கரமாகக்கழிக்கிறேன் அவன் குடிப்பது தாடி வளர்ப்பது இன்னொரு பக்கம் என் குரல்வளையை இறுக்குகிறது. உலகத்து சோகங்கள் அனைத்தையும் அவனுடைய இதயத்தில் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி அழகு பார்க்க முயல்கிறேனோ?

அடுத்து வரப்போகும் bus ஐ எதிர்த்துக் கொண்டு இன்னும் கொஞ்சப்பேர் bus halt இற்குள் நின்றார்கள். அவர்கள் போனதும் சிறிது நேரத்தில் சில பையன்கள் வந்து சேர்வார்கள். ஒவ்வொரு ஊரிலும் வேலை இல்லாத, வேலைக்குப் போக விரும்பாத பையன்கள் இருக்கிறார்கள். அவர்கள் எந்த பஸ்சிலும் ஏறப்போவதில்லை. ஒருவனது மரண ஞாபகமாகக் கட்டப்பட்ட இந்த bus halt இற்குள் இன்னும் சிலரை உயிருடன் புதைத்துக் கொண்டிருப்பார்கள் இவர்கள்.

இவர்கள் எனக்கு எத்தனையோ காந்தர்வக் கல்யாணங்கள் செய்து வைத்தாயிற்று ஒவ்வொரு கல்யாணத்தின் போதும் தேவர்களாய் வானத்தில் நின்று மலர்கள் தூவியிருப்பார்கள். இதன் மூலம் பிறக்கப் போகும் என் ஒரு குழந்தையை Nursey classக்குக் கூட்டிச் சென்று வரும் பெறுப்பை வேலை வெட்டியற்ற இவர்களில் எவனாவது ஒருவனுக்குக் கொடுத்துவிட எண்ணி உள்ளேன்.

கடந்த சனிக்கிழமை வகுப்பறை ஒன்றின் கரும்பலகையில் எனக்கும், 'ஹீரோ'வுக்கும் கல்யாணம் செய்து வைத்து விட்டார்கள். இதை யார் எழுதினார்கள், பின்னர் கண்டு இதை யார் அழித்தார்கள் ...போன்ற தேவையற்ற ஆராய்ச்சிகளை நான் செய்யப் போவதில்லை, என் துகிலுரிபடுவதில் இந்த துரியோதனன் சபையில் யாருக்கு ஆட்சேபனை இருக்கும்? கிருஷ்ண பரமாத்மாதான் பஸ்ஸில் 7.50க்குப் போய் விட்டானே.

வகுப்பறையை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். 'good morning teacher' என்றார்கள் குழந்தைகள். (அது எனக்கல்ல குழந்தைகளே! ) என்னோடு சேர்த்து இவர்களையும் அலைக்கழிப்பது எவ்வளவு துரோகம்.

என்னுடைய இந்த நாட்களில் நான் தூக்கமின்றி, உணவின்றி தலையணையை நனைத்து, வெளிச்சமுள்ள பரந்த வெளி எதுவென்று வெள்ளை மணல் நிறைந்த மனித நடமாட்டமேயில்லாத (அவன் மட்டும் அங்கே இருக்கட்டும்) பகுதியொன்றைக் கண்டுபிடிக்க அலைகிற அலைச்சலில் இந்த சம்பவம் தான் ஏனோ கண்முன்னால் வந்து நின்றது.

சிறு பிராயத்தில் எனது வீட்டுச் சுற்றாடலில் சில சக்கிலியர்கள் வாழ்ந்து வந்தார்கள். எனது வீட்டு ஜன்னலில் ஏறி அவர்களை நான் மிகவும் பயத்துடன் கவனித்துக் கொண்டிருப்பேன். அவர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான நேரங்கள் குடியிலும் கும்மாளத்திலும், ஏச்சிலும், பேச்சிலும் கழியும். ஒரு நாள் அவர்கள் ஒரு கிடங்கு நிறைய நெருப்பு மூட்டி அதன் மேலே ஓர் உயிர்க்கோழியைக் கம்பில் கட்டி, வாட்டி யெடுத்துக் கொண்டிருந்தார்கள். எனது மனத்தில் மிகவும் உறைந்து போன சம்பவம் இது. அந்தக் கோழி நான் இல்லை? நான் வாடுவது எந்த நெருப்பில், எந்த சிறையில்......?

பக்கத்து வகுப்பில் இருந்த R. K என்னை நோக்கி வந்தான். "மனோஹரி, இன்று பஸ்ஸில் கண்டீர்களா"?

'கண்டு விட்டேன்' என்றான்.
அவனை ஒரு சாட்டாக வைத்து என்னிடம் கதைத்துக் கொட்ட வரும் R.Kஇன் ஆர்வம் எனக்குத் தெரியாததல்ல. R.K என்னைப் பற்றி என்ன எண்ணுகிறான். 'திருமணமான ஓர் ஆடவனுடன் இப்படிப் பழகும் இவள் எனக்கும் இணங்கிப்போவாள்,

நேற்றைய last period இல் R.K என்னுடன் வந்து கதைத்துக் கொண்டிருந்த போது down stain steps ல் நின்று 'காதலிக்க நேரமில்லை' என்று ஒருவன் பாடும் சத்தம் கேட்டது. இந்த வித்தியாலயத்தின் சிறம்பம்சம்; குரங்குகள், எருமைகளுக்குக் (குரலில்) கூட இங்கே படிக்க அனுமதி கிடைத்து விடுகிறது.

என்னிடம் வந்து அளப்பது சம்பந்தமாக என்விருப்பமின்மையை R. K யிடம் நேரடியாகச் சொல்லிவிடுவதில் எனக்கொன்றும் பயமில்லை. எனினும் அவனுடைய கறுத்த இறுகிய முகம் மேலும் கறுத்துப் போகும். அப்படி ஓர் அவலத்தைப் பக்கத்து வகுப்பறையில் வைத்து சகிக்கத்தான் வேண்டுமா?

R K சற்று நேரம் வளவளத்து விட்டுப் போய்விட்டான். என் ஸ்வாரஸ்யமற்ற 'ஊம்' ஓம், இல்லை'கள் அவனைப் போகச் செய்திருக்கலாம்.

இந்நேரம் அவன் என்ன செய்து கொண்டிருப்பான்? அவனுடைய அலுவலகத்திலும் நேரப்பதிவுப்புத்தகம் ஒன்று வைத்திருப்பார்களா? அதில் கையெழுத்திட்டு விட்டு என்ன செய்வான்? என்னைப் போலவே அவனும் என்னைப்பற்றிய நினைவுகளில் மூழ்கிக் கிடப்பானா? calculaterல் பச்சை இலக்கங்களுடன்போராடிக்கொண்டிருப்பானா? T. V இல் போகும் அவனுடைய company விளம்பரத்தில் வருபவன் போல விலை விபரங்கள் சொல்லிக் கொண்டிருப்பானா?

தூக்க நிலையில் மட்டுமல்ல, விழிப்பு நிலையிலும் கூட அவனையும் என்னையும் சேர்த்துத்தான் நிறையக் கலர்க்கனவுகள். நான் இப்படியே கனவுலகில்தான் நிரந்தரப் பிரஜையாகி விடுவேனா என்ற அங்கலாய்ப்புத்தான் இப்போது அடிக்கடி எனக்குள்.

நேற்றுக் கூட ஒரு கனவு ..... ஒரு பெரிய ஆலமரம். ஆனல் அசாதாரணமாக அதன் இலைகள் வெள்ளிகள் போல் மின்னுகின்றன. கண்களைக் கூச வைக்கும் வெளிச்சம். ஆனல் அது மேற்பகுதியில் மட்டும். மரத்தின் கீழே அடிப்பாகத்தில் நிசப்தமும், இருட்டும். மரத்தின் கீழே அவன் இருக்கிறான், என்னைக் காத்துக்கொண்டு. நான் மெதுவாக மிக மெதுவாக நடந்து வருகிறேன். பொறுமையிழந்த அவன் விரைவாக வரும்படி கத்துகிறான். ஆனல் நான் மெதுவாகவே வருகிறேன். அவன் பொறுமையில்லாதவனாக ஓடி வந்து, என்னைக் கட்டியணைத்து..... சில நிமிசங்களுக்குள் நான் களைத்துப் போகிறேன். அதைக்கூட அவன்தான் சொன்னான். என்னை விடவில்லை. அப்படியே அவன் பிடியில் இருக்கிறேன். நான் சொல்கிறேன். "மேலே போகப்போறேன். மேலே நல்ல வெளிச்சம்...... அதுதான் எனக்கு நல்ல விருப்பம்... நீங்களும் உங்கள் இருட்டும்" அவனுக்கு ஒரே கோபம். என்னைத் தள்ளி விடுகிறான். நான் விழ முன்பு தாங்கிக் கொள்கிறான், மீண்டும் தொடர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்சத்தைப் பற்றி மீண்டும் நான் சொல்ல முனைந்த போது ஒரு மெலிந்த— ஆனால் அவனையே போன்ற அழகான பெண் குழந்தை 'அப்பா...அப்பா'! என்ற சிணுங்கலுடன். நான் அவளைத் தூக்க முற்படும் போது ஒப்பாரி வைக்கிறாள். அவனிடம் போகப் பிரியப்பட்டு அடம் பிடிக்கிறாள். அவளை அவனிடம் தூக்கித் தருகிறேன். பிள்ளையுடன் கொஞ்சி, விளையாடியவாறு அவன் இருக்கிறான். என்னைக் கவனியாமல். the end.

வகுப்பில் தலை தூக்கிய சத்தத்தில் நான் மறுபடியும் விழிப்புணர்வு பெற்றேன். இன்று என்னால் படிப்பிக்க முடியாது. அவனுக்கு இது தெரிந்தால் நிச்சயம் கோபிப்பான். அவன் ஒரு தடவை சொன்னான். 'என்னுடைய மனதில் தங்கியுள்ள என் ஆசிரியர்கள் யார் தெரியுமா? மிக அக்கறையுடன் அன்புடன் படிப்பித்தவர்களும் அழகானவர்களும்தான்'.

வகுப்புக்கு எழுத்து வேலை கொடுத்து விட்டு மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்தேன்.

இன்று காலையில் Education officer ஒருவன் வந்திருந்தான். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பேயே Notes of lessons காட்டியபடியால் தப்பி விட்டேன் என்று சிவகாமி ரீச்சரும் இன்னும் இரண்டு பேரும் சொன்னார்கள். மொத்தம் ஆறு வெவ்வேறு பாடங்களுக்கு நான் Notes எடுத்தாக வேண்டும். இந்தப் பள்ளியில் என்னைப் போல ஆறு வெவ்வேறு பாடங்கள் எடுப்பவர்கள் யாருமில்லை. (ஒழுங்காக ஒரு பாடத்தை எடுத்து முடிப்பார்கள் என்றால் அதுவே சந்தோஷம்.) எவ்வளவு நேர்மையான நிர்வாகம்.

அதிபரும், மனைவியும் ஒரே இடத்தில் பணிபுரிவது அவர்களிருவருக்கும் சந்தோஷமும், வசதியும் தரக்கூடிய ஒன்றாக இருக்கலாம். ஆனால் அது மற்றவர்களுக்கல்ல. அமெரிக்காவில் நான்ஸிரீகன் மாதிரி இங்கே பள்ளிக்கு Mrs, Principal first lady. அவளுக்கு நிறையக் கவலைகள் முக்கியமாக காலையில் bus இல் போகும் அவனை நான் சந்தித்து விட்டேனா என்பதை உறுதிப்படுத்தி விட... அவள் எவ்வளவு குரூரமானவள். பேச்சிடையே ஒரு நாள் சொன்னாள் 'எவ்வளவு தான் cheap என்றாலும் எனக்கு second hand சாமான்கள் வாங்குவதில் துளி கூட இஷ்டமில்லை.'

எனக்கு மனசுக்குள் சிரிப்பு வந்தது. 'அம்மணீ, அதி புதிய பொருட்களை வாங்கி விட்டும் சிலர் காலம் தாழ்த்தித்தான் புரிந்து கொள்கிறார்கள். அந்தப் பொருளால் பயன் ஏதுமில்லை என்று' எனச் சொல்ல என் வாய் துடித்தது. எனினும் Principal பாவம். அவரென்ன செய்தார், அவரை இங்கு இழுக்க?

மழை சடசடவென்று பெய்யத் தொடங்கிற்று கண்களை மூடிக் கொண்டு மழை பெய்யும், மோதும் சத்தத்தை மாத்திரம் கேட்பது எனக்குப் பிடிக்கும்.

மழை பெய்யத் தொடங்கி விட்டால் எனக்குப் பிரியம் இல்லாதது பஸ் பயணங்கள்தான். அப்பாவுடனான சைக்கிள் சவாரியை மாரி காலம் ஏற்பதில்லை.

பழைய மழை நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். அப்போதெல்லா மழை நாட்களில் நான் என் படுக்கை அறையை விட்டு வெளியே வருவதில்லை. சாப்பாடு, தேநீர் எல்லாமே தேடி என் அறைக்கு வந்துவிடும். ஒரு விண்வெளி பயணியைப் போல உடுத்திக் கொண்டிருப்பேன். குளிர் பொறுக்க முடியாவிட்டால் socksம் கால்களில் ஏறி விடும். வீட்டில் மற்ற எல்லோரும் என்னைப் பார்த்துப் பொறாமைப் படுவார்கள். 'கிழட்டுச் செல்லம்' என்று. உண்மையில் நான் தான் எங்கள் வீட்டின் செல்லப்பிள்ளை. அப்பாவின் pet. அப்பா அடிக்கடி சொல்வார் பெலஹீன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான பிள்ளையுடன் தானும்பெற்றேருக்குகூட ஒட்டுதல். இதை நான் முழுசாக ஒத்துக் கொள்ளாவிட்டாலும் உண்மை இது தான். asthma வந்து நான் அவதிப்படும் போதெல் லாம் அப்பாதான் அருகில் இருந்து என் நெற்றியையும், முதுகையும் தடவிக் கொடுப் பார். அம்மா இப்படியெல்லாம் செய்தது கிடையாது. நான் தூங்கும் வரை அப்பா விழித்திருப்பார். அந்த நேரங்களில் நான் சொல்வதுதான் நடக்கும். படுக்க முடி யாது, கதிரை வேண்டும் என்ருல் கதிரை வரும். வேர்க்கிறது என்று சொன்ஞல் எல்லா ஜன்னல்களும் திறபடும். நான் அழுதால் அப்பா பயந்து போவார். நிலை மையைப் பார்த்து Doctorஐக் கூட்டி வருவார். தாங்குவது கஷ்டம் என்ருலும் 'ஊசி போடுங்கள்' என நானுகவே வலிந்து Doctor இடம் கேட்பேன். Doctor முத லில் மறுத்தாலும் நான் படும் அவஸ்த் தையை சகிக்க மாட்டாமல் ஊசி போட் டதுண்டு. நான் அப்படியே நித்திரை மயக் கத்தில் ஆழ்ந்து விடுவேன்.

சென்ற வருடம் மழை நாட்கள் ஒன்றில் நானும், அவனும் Busல் வந் தோம் மழைப் பயம், என் asthma பற் றிய யோசனை எதுவுமில்லாமல் அவனு டன் அந்த மழை நாளில் பயணம் செய்ய முடிந்தது. நான் இறங்க வேண்டிய இடம் நெருங்கியதும் பிரிவு பற்றிய துயரம் அழுத்தியது.

'நீங்களும் இறங்குங்கள்' என்றேன்

'இறங்கி'?

'இறங்குங்கள்'

தார் ரோட்டின் ஈரத்தில் சிவப்பிழுத்துக் கொண்டு பஸ் எங்களை விட்டுவிட்டுப் போயிற்று. ஆளுக்கொரு குடைகளை விரித் துக் கொண்டு பிரதான வீதியில் இருந்து பிரிந்து போகும் ஒரு தெருவில் என் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்குகிறேம். தெரு வளைவை நெருங்கும் போது நான் சொல் கிறேன்

''ஒரு குடையை துஷ்பிரயோகம் செய்வது போல் இல்லை?''

அவன் என் குடையின் கீழ் வந்தான். வெட்டிய ஒரு மின்னலில் அவன் முத்த மிட்டதை நனைந்த பூக்கள், இலைகள், கொடிகள், ஒதுங்கி நின்ற ஒரு மாடு... இவையெல்லாம் பார்த்திருக்கும்.

அம்மா சென்ற வாரம் விஷயம் தெரிந்து தேம்பி அழத் தொடங்கினுள். ''மகளே, இந்த விஷயம் இனி வேண்டாம். ஊர் காறித் துப்பும். கல்யாணம் முடியா தவன் போல் நடித்து அவன் உன்னை ஏமாற்றி விட்டான்..'' அந்த நேரத்திலும் நான் அழுதேன் என்ருல் அது கூட அவன் சார்பாகத்தான். அவனுக்குத் திருமணமா கிற்று எனத் தெரிந்தும் அவனுடன் நேர்ந்த ஒவ்வொரு சந்திப்புக்களிலும் நான் எப் போதாவது விலகிப் போக முயன்றிருக்கி றேனு?

நான் எப்பொழுதும் வெளியில் திரிவ தில் அவ்வளவாகநாட்டம்கொண்டவளல்ல. church school, அல்லது அக்காவுக்காகக் கட் டப் படும் புதுவீடு, tution நாட்களில் நான் வெறுக்கும் பஸ் பயணங்கள். இவற்றுக் கிடையில் எங்கே எப்படி இந்தத் தவறு நேர்ந்தது என வீட்டார் ஆராய்கிருர்கள். இன்னெரு சிறகடியை இவள் எப்படித் தேடினுள் என்பது அவர்களுடைய வியப்பு. நான் ஒரு நாள் அவனுக்கு Kamala Dasன் my story இலிருந்து வாசித்துக் காட்டி னேன்...... I had expected him to take me in his arms and stroke my face, my hair, my hands and whisper loving words. I had expected him to be all that I wanted my father to be, and my mother. I wanted covrersation, companionship, and warmth sex; was far from my thoughts......

என் சகோதரனுடை நாட்குறிப் பொன்றை சமீபத்தில் பார்த்த நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாறிப் போனேன். Black sheep என்ற வார்த்தையை என்னைக் குறித்து அவன் பிரயோகித்திருந்தான். இந்த விவகாரம் குறித்து தன் நண்பனுன பாலாவிடம் பேசி அழுததாக எழுதப்பட்ட வரியை வாசித் ததும் எனக்குள் விசனம்தான் பொங் கிற்று. 'அடேய் தம்பி, இந்த பாலா ஒரு நாள் கருக்கல் பொழுதில் வாசலில் நின்ற போது என் மார்பைக் கிள்ளும் நோக்கத்துடன் வந்தவன் என்பது தெரியா மல்... நீயும் உன் நாட்குறிப்பும்!'

எல்லோரும் ஒத்த குரலில் பாட முனைவது இதுதான். 'அவன் கல்யாணம் ஆனவன்... அவனுடன் பழகுவதில் என்ன பிரயோசனம்?' பிரயோசனம் எதிர்பார்த்து தானு அன்பு. எனக்குப் புரியவில்லை. புரி யாமையின் எல்லையில் மௌன மான அழுகை இந்த மௌனம் தான் என்னை எங்கோ கொண்டுபோய் விடுகிறது.

நேற்றிரவு கேட்ட ஒரு பாடல்; chiquitita எனத் தொடங்கி பரவிற்று இதய கீதம் என்பதன் அர்த்தம் இந்த ABBA பாடலைக் கேட்ட போதுதான் மன சுள் மின்னிற்று. எவ்வளவு ஆழமுண்டோ அவ்வளவு தூரமும் அந்தப் பாடகி உள் நுழைந்தாள். எழுதியவன் (ள்) வாழ்க! பாடல் ஒலித்து முடிந்ததும் எங்கோ இருட் டில் தனித்து விடப்பட்டதாய் உணர்ந் தேன்.

ஒரு வேளை அவனைப் பிரிந்து விட நேரின்; என் அறிவு மனதை கட்டுப்படுத் தத் தூண்டலாம். ஆனுல் இந்தப் பாடல் களும் அவன் கதைகளும், கவிதைகளும்...

இன்று என்னல் இங்கே நீடிக்க முடியாது. எழுந்தேன். வகுப்பறையிலிருந்தவர்கள் என்னைப் பார்த்தார்கள். Principal இடம் வந்து அரை நாள் விடுமுறைக்கு விண்ணப் பித்தேன்.

staff room ஐக் கடக்க நேரிட்ட போது பேச்சு அறுபட்டது. அவர்கள் என்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கலாம். 'அவர் களைக் குழப்பக் கூடாது. நடத்துங்கள்'

தெருவுக்குப் போனதும் பஸ் கிடைத்தால் பத்துமணிக்குள் வீட்டுக்குப் போய்விடலாம். அங்கு போயும் என்ன செய்றப் போகிறேன். அது இன்னெரு அசோக வனம் அல்லவா?

ஒருவன் முன்பு அனுபவித்த ஒரு உணர்வை தன் உள்ளத்தில் மீண்டும் எழுப்பி அதனை அசைவுகள், கோடுகள், வர்ணங்கள், ஒலிகள் அல்லது சொல் வடிவங்கள் மூலம் ~~அந்த உணர்வை~~ பிறரும் உணரும்படி செய்ய வேண்டும். இதுவே கலையின் செயலாகும்.

— டால்ஸ் டாய் —

# ஒரு மானுடன் பாடிய பாட்டு

சண்முகம் சிவலிங்கம்

வாளியில் நீரெடுத்து வந்தாய்
வரும்போது—
உன்,
தோளினது சட்டைத் தொடுப்பு வழுவியது.
வாளியின் பாரம் வளைத்த உடலோடு,
தோளில் வழுவிய சட்டைத் தொடுப்பைநீ
மேலே எடுத்து விட்டுக் குனிந்தாய்.
குனிந்ததுமே,
ஏதோ நினைத்ததுபோல்
என்னை ஓர் முறை
பாதி நிமிர்ந்து தலைசாய்த்துப் பார்த்தாய்.

ஓ!
பூவே, உனது விழிகளில் பூத்திருந்த
நேயத்துக் கென்ன பொருளை நினைப்பனோ?
வாளியில் நீரெடுத்து வந்தவோர் நாணமோ?
தோளினது சட்டை வழுவிய துணுக்கமோ?
ஏதோதோ?—
ஏதோ?—
எனக்குத் தெரியாத
பேதலிப்பில் உன்னுடைய பிஞ்சு இதழிடையே
மூடிக்கிடந்த முதிரா முறுவலையும்
ஆயத் தெரியாது அப்பால் நடக்கையில்—
ஓ! பூவே,
நான் புதிய உணர்வொன்றில்
மானுடன்ஆகி வாய் முணுமுணுத்தேன்:

''என் நினைவுக் கரங்கள் உன்னைத் தீண்டவிட மாட்டேன்,
என்நினைவுப் பூச்சி உன்னில் ஊரவிட மாட்டேன்,
உன்நினைவின் வருடலினல் என் இதயம் ஆறும்,
உன்நினைவின் அதிர்வுகளால் என் இதயம் பாடும்...
ஓம் ஓம்,... ஓம் எனது பூவே,
என்நினைவுக் கரங்கள் உன்னைத் தீண்டவிட மாட்டேன்
என் நினைவுப் பூச்சி உன்னில் ஊரவிட மாட்டேன்.''

*(22-09-1975)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருத்தலியல் வாதம் என்கிற எக்சிஸ்டென்ஷியலிசம் தொடர்பாக

சி. சிவசேகரம்

*[முற்றொடர்]*

**நூலின் இரண்டாம் பகுதி......**

**3. 1.** நூலின் இரண்டாம்பகுதி இருத்தலியலாளர் பற்றியது. 'இறுதித்துயரமா நம்பிக்கையா?' என்ற அத்தியாயத்தை அடுத்து கீர்க்கெகார்ட், நீட்சே (Nietsche), ஹைடெக்கர், ப்யூபா (Buber) பேர்டியேவ் Berdeyev), காம்யூ (Camus), சார்த்ர் (Sartre) பற்றிய தனித்தனி அத்தியாயங்களும் இறுதியாக 'விமோசனமும் வழிமுறையும்' எனும் அத்தியாயமும் உள்ளன. இந்த அத்தியாயங்களில் SVR உடன் என் முரண்பாடுகள் முன்னையவற்றினும் வேறுபட்டவை.

**3. 2.** கீர்க்கெகார்ட் பற்றிக்கூறும்போதுகீர்க்கெகார்ட் மாக்ஸிக்குச் சமகாலத்தவராக இருந்தும் அவரது சிந்தனைகள்மார்க்ஸின் கவனத்தை ஈர்க்காதமைக்கும் அவர் மார்க்ஸின் சிந்தனைகளை அறிந்துகொள்ளாமைக்கும் மூல காரணம் அவர் டேனிஷ் மொழியில் எழுதியமை என்று கருதும் SRV, 19ம் நூற்றாண்டின் பெரிய ஐரோப்பியச் சிந்தனை இயக்கங்களுடன் அவருக்குத் தொடர்பில்லாமையையும் சுட்டிக்காட்டுகிறார். இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். மார்க்ஸோ ஏங்கல்ஸோ இருத்தலியல் சிந்தனைக் குழப்பத்தை எப்போதோ அதன் குப்பைமேட்டுக்கு வழிகாட்டியிருக்க முடியும்.

மனித விடுதலையை அடிப்படையாகக் கொண்ட அளவிலும் அதை உண்மையுடன் நெருக்கமாகப் பிணைத்துப் பார்ப்பதிலும் மார்க்ஸுக்கு அருகில் நிற்பதாகக் கூறப்படும் கீர்க்கெகார்ட்டின் உண்மைவேறு,மார்க்ஸின் உண்மைவேறு மாக்ஸின் உண்மை புறநிலை யதார்த்தங்களினின்று விதிகளின்வடிவில் கிரகிக்கப்பட்டு மனித வாழ்வை மேம்படுத்தப் பயன்படும்விஞ்ஞானரீதியான உண்மை. அது என்றைக்குமே முழுமையாகாத உண்மையாயினும் அதைப்பெற மனிதன் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் மனித இன விடுதலையை நோக்கி மனிதனை உந்திச் செல்லும் வலிமையை வழங்கும் உண்மை. கீர்க்கெகார்ட்டின் உண்மை அகநிலை சார்ந்தது. விஞ்ஞான ரீதியான அறிவுசார்ந்த உண்மைகளினின்று தப்பியோட முனைவதும் அபத்தமானது என்று கருதப்படும் புறஉலகுக்குப் பகுத்தறிவு சாராத ஒரு மாற்றாக அமைவதுமான 'உண்மை'

வரலாற்றையும் வரலாற்றுவிதிகளையும் கீர்க்கெகார்ட் நிராகரிப்பதில் வியப்பொன்றுமில்லை. அவரது தனிமனிதவாதமும், அறிவு விரோதமும், சமுதாய வெறுப்பும் அவரது சிந்தனைப் போக்குடன் நெருக்கமான உறவுடையன. நிர்க்கதியான நிலையையே ஏற்று அதனுள்ளேயே உழன்று அதையே வாழ்வின் சாராம்சம் என்று உயர்த்தி அதனூடேயே நம்பிக்கையும் விமோசனமும் தேடும் சித்தாந்தம் அவருடையது. கீர்க்கெகார்ட்டின் சமுதாயவிமர்சனம் சமுதாய விமோசனத்துக்கு வழிகாட்டாத ஒன்று. கீர்க்கெகார்ட்டின் அகநிலைச்சார்பிலும், முன்னேற்றம் பற்றிய ஏமாற்ற உணர்விலும், சுகபோகவாழ்வு மீதான கோபத்திலும் அவரது சூழலின் யதார்த்தத்தின் மெல்லிய பிரதிபலிப்பாவது உள்ளது. அவரது வாரிசுகட்கு அப்பெருமை கூடச் சேருமோ என்பது ஐயம்.

**3. 3.** நீட்ஷேயின் பிற்போக்கு நிலைப்பாடுகளைச் சுட்டிக்காட்டத் தவறாத SVRசிலவிஷயங்களை அசட்டைசெய்து விட்டார். பூர்சுவா சமுதாயம் பற்றிய நீட்ஷேயின் விமர்சனம் சிறிதே மாக்ஸியச் சாயலைக் கொண்டிருக்கக் காணலாம் என்றாலும் அது சாராம்சத்தில் நிலவுடைமைசார்ந்த கனவுலகச் சிந்தனைதான் என்று சுட்டிக்காட்டும் SVR,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்ஷேயின் எழுத்துக்கள் ஜேர்மன் இன மேன்மையை வலியுறுத்தியதுடன் யூத இன விரோத எண்ணங்களையும் கொண்டிருந்ததைத் தவறவிட்டுவிட்டார்.

3. 4. ஹைடெக்கர் ஒரு முக்கிய இருப்பியல் வாதி. அவர் ஒரு பிற்போக்குவாதி என்றதகவலையும் அவர் நாஜிக்கட்சியில் சேர்ந்ததையும் சொல்வதுடன் SVR நிறுத்திக்கொள்கிறார். மார்க்ஸின்' அந்நியமாதலுடன்' ஹைடெக்கரின் சிந்தனையின் உடன்பாட்டையிட்டுத்தன் அங்கீகாரத்தைத் தெரிவிக்கும் SVR அந்த ஹைடெக்கர் ஹிட்லருக்குத் தாசனானதற்குத் தரும் விளக்கம் திருப்தியாக இல்லை. ஜேர்மன் மேன்மையையும் ஜேர்மனியின் வழிகாட்டும் தகுதியையும் பற்றிப் பேசும் ஹைடெக்கருக்கு அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் தொழில்மயம் தீயது ஆனால் ஹிட்லரின் ஜேர்மனியில் க்றுப், தைஸென் போன்ற தொழிலதிபர்களது விருத்தி கண்ணுக்குப் படாத விஷயம். யூதரான ஹூஸேள் (Husserl) இவரது முன்னோடி. ஹூஸேளுடனான தொடர்புகளைக் கச்சிதமாகத் துண்டித்துக் கொண்ட இந்தக் கண்ணியவான் தான் விஞ்ஞானம் அழித்துவிட்ட மனிதத்தன்மையை மீட்க வழிகாட்டுகிறார்!

3. 5. காம்யூ (Camus)வின் மாக்ஸியவிரோ! தம் புரட்சிவிரோதம் வெகுஜனங்கள் பற்றிய இழிவான மதிப்பீடு என்பனவும்SVR கவனத்தைத்தீர்க்கின்றன. ஐரோப்பியச் சூழ்நிலையின் சிக்கலான அறப்பிரச்சனையுள் வாழ்ந்து அதை மீறிவரமுயன்ற காம்யூவின் நேர்மை ஒருநல்ல பண்புதான்.வினோபாகூட நல்ல மனிதர்தான்-ஆனால்! 77 எமர்ஜன்ஸியை ஆதரித்தாரே ஹிட்லர் சைவச் சாப்பாட்டுக்காரன். மொரார்ஜி நேர்மையான மனிதர் என்கிறார்கள். நேர்மை, கொள்கைப்பிடிப்பு, சத்திய வேட்கை, இப்படி நல்ல இயல்புகள் பல. ஆனால் சரியான வழிகாட்டலற்ற நேர்மையும் திறமையும் எங்கே போய்முடிகின்றன? இவை பற்றி இருப்பியல்வாதத்துக்கு ஏது அக்கறை?அவர்களது உண்மை தான் அகநிலை சார்ந்த விஷயமாயிற்றே. அங்கே சரி ஏது பிழை ஏது? காம்யூவின் எழுத்துக்கள் சிறப்பது அவரது அறிவின் ஆழத்தாலா அல்லது உணர்ச்சிகளின் ஆழத்தாலா? இந்தக் காம்யூ மனிதஇன விமோசனத்துக்கு வழிகாட்டுபவரா?

3. 6 சார்த்ர் ஒருவரே இருத்தலியல்வாதப் பிரமுகர்களுள் முற்போக்கானதும் மாக்ஸியத்துக்கு அனுதாபமான நிலைப்பாடுகளை எடுத்தவர். இவர் பால் SVR மிகவும் ஈடுபாடுகாட்டுவது குறிப்பிடவேண்டியவிஷயம். சார்த்ர் பற்றி ஒரு முக்கிய கேள்வியை இங்கு எழுப்புவது பயனுள்ளது. நடைமுறையில் பெருமளவும் முற்போக்குத் தன்மையுடையனவும் புரட்சிகர இயக்கங்கட்குச் சார்பாக அமைந்தனவுமான நிலைப்பாடுகளை அவர் கொண்டார் என்றால் அவரால் தன்னுடைய இருத்தலியல்வாத அடிப்படையில் அந்த நிலைப்பாடுகட்கு வரமுடிந்ததா? SVR கூறுவதுபோல ''தன் தத்துவ நிலைப்பாட்டிலுள்ள குறைகளைச் செயலிற் தவிர்த்துக் கொள்கிற'' சார்த்ர் தன் தத்துவ நிலைப்பாட்டின் குறைகளை நீக்க முடியாமல் விட்டு விட்டாரா?

தன் இருத்தலியல் தத்துவத்தினூடு மாக்ஸியத்துடன் உடன்பாடுகாண முடியாத சார்த்ர் நடைமுறையிலும் சிந்தனையிலும் மாக்ஸியத்துடன் காண விழைந்த நெருக்கத்தை மற்ற இருத்தலியலாளர்கள் கண்டித்தமை இருத்தலியலின் கண்ணோட்டத்தில் நியாயமானது அல்லவா? இருத்தலியலின் வறுமையை உணர்ந்த சார்த்ர் அதை நிராகரிக்கத் தயங்கினார் என்றால் அதற்கான காரணமென்ன? இருத்தலியலின் குறைபாடுகளைக் களைய அவர் முயன்று முடியாமற் போனாரா? இந்த விஷயங்கள் தெளிவுபடுத்தப்படாத பட்சத்தில் அவர் வந்தடைந்த மாக்ஸியச் சார்பான முடிபுகள் தற்செயலானவை என்று கருத இடமிராதா? அவர் நேர்மையாளரா, அவர் மாக்ஸியம் பற்றிச் செய்யும் விமர்சனங்கள் நியாயமானவையா என்பன வேறு விஷயங்கள். அவரது இருத்தலியல் சரியானதா என்ற கேள்விக்கான பதில், இல்லை' என்பது தான்.பல இடங்களில் மாக்ஸியம் பற்றி அவரது மதிப்பீடுகள் தவறானவை என்றால் அவர் சில முக்கிய விஷயங்களில் சரியான' முடிபுக்கு வந்தார் என்பது எந்த, அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்னும், அல்ஜீரியா விஷயங்களில் மாக்ஸியவாதிகளலல்லாத பலர், சில சமயங்களில் பிற்போக்குச் சிந்தனையாளர்கள் கூட, சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். 1968 பிரஞ்சுப் 'புரட்சி' பெரும்பாலும் இளம் அராஜவாதிகள், பலரகப்பட்ட ட்ரொட்ஸ்கிவாதிகள், மாஓவாதிகள் என்று தம்மை அழைத்துக் கொண்ட சிலர் தலைமையில் நடந்த ஒரு கலகம். அதில் பிரெஞ்சுத் தொழிலாளி வர்க்கத்தினதும் பரந்துபட்ட வெகுஜனங்களதும் பங்கு என்ன? இவர்களுக்கு ஆசீர்வாதம் தந்தவர் மாக்கூஸெ (Marcuse). இந்தக் கலகத்தின் தோல்விக்குக் காரணங்களுள் அதன் தவறான அணுகுமுறை முக்கியமான ஒன்று (இன்று இதன் தலைவர்கள் எல்லாம் எங்கே? பல்கலைக் கழக மாணவப் 'புரட்சிவீரர்களை' நிறையவே கண்ட நாடு இது. அங்கே நடந்தது பற்றி அதிகம் விளக்க வேண்டிய அவசியமில்லை.) மேற்படி சிந்தனைக் குழப்பத்திற்கு சார்த்ர் தந்த ஆதரவு தொழிலாளி வர்க்கத்தைப் பற்றிய அவரது தவறான மதிப்பீட்டுடன் தொடர்பற்ற ஒன்றா? சார்த்ர் மேதையாக இருக்கலாம், நல்லவராகவும் நேர்மையாளராகவுமே கூட இருக்கலாம். அதனாலேயே அவருடைய நிலைப்பாடு சரியானதாகிவிடாது. அவர் மற்ற இருத்தலியலாளர்களினும் மிகவும் வேறுபட்டவர், உயர்ந்த மனிதாபிமானி என்ற விஷயங்களில் நான் SVR உடன் பெரிதும் உடன்படுகிறேன். மாக்ஸியம் பற்றி அவருடைய கருத்துக்களை SVR அளவுக்கு என்னால் மதிக்கமுடியவில்லை.

4. 1. இறுதி அத்தியாயங்களிரண்டும் இருத்தலியலாளர்க்கு மாக்ஸியத்தின் மறுமொழியாக அமைகின்றன. SVR இன் மாக்ஸிய வியாக்கியானங்களை என்னால் முற்றாக ஏற்க முடியவில்லை என்பது ஒருபுறமிருக்க, இடதுசாரிக் கட்சிகளது குறைபாடுகள் பற்றி அவரது கருத்துக்கள் பொதுவாக நியாயமானவையே. இருப்பினும், ஒரு நடைமுறை அரசியல் இயக்கத்தை அதன் யதார்த்தமான சூழலில் வைத்து மதிப்பிடவேண்டிய நிலையில், SVR இருத்தலியல்கார நாஜிகளிடம் காட்டும் பரிவில் சிறிதேனும் இடதுசாரிக் கட்சிகட்குக் காட்டியிருப்பின் நியாயமாக இருந்திருக்கும். ஒரு கம்யூனிஸ்ட்கட்சியைத் திரிபுவாதக் கட்சி என்று முத்திரை குத்தி விட்டு அதனால் அது வெகுஜன விரோதக்கட்சி என்ற முடிவுக்குத் தாவமுடியாது. (மாஓ ருமேனிய கொரிய கம்யூனிஸ்ட்கட்சிகளுடனான உறவை ஒரு கட்டத்திலும் முறிக்கவில்லை. மாஓசேதுங் சிந்தனையை அன்று தூக்கிப் பிடித்த அல்பேனியக் கட்சி இன்று ஒரு விளக்கமுமின்றி மாஓவையும் தூஷிக்கிறது. ஒவ்வொரு கட்சியையும் அதன் சூழலில் வைத்தே சரியாக மதிப்பிட முடியும். தவிர, தேசிய, சமுதாய, சரித்திர எல்லைகட்கப்பாற்பட்ட காலத்தின் ஆளுமையற்ற விதிகள் எதையும் நான் அறியேன்) வெறுமே 'தத்துவத் தூய்மையின்' அடிப்படையிலோ 'நல்ல மனிதர்கள்' என்ற அடிப்படையிலோ நடைமுறை இயக்கங்கள் வளர்ந்தது கிடையாது. இடதுசாரி இயக்கங்களுள் ஊழல், போலித்தனம், வரட்டுத்தனம் ஆகியன அகற்றப்பட வேண்டியது அவசியம். ஆனால் நடைமுறை இயக்கத்தின் போக்கிலேயே இவை சாத்தியமாகின்றன. அதற்காகச் சரியான நிலைப்பாட்டை வலியுறுத்தாமல் இருக்க வேண்டாம், ஆனால் கட்சியில் உள்ள மனிதனையும் கொஞ்சம் சகிப்புத் தன்மையுடன் பாருங்கள் என்கிறேன்.

4. 2. ''இத்தகைய உன்னதமான மாக்ஸியமுமே ஒரு சிறுகிப்போன வடிவம் எடுத்த காலத்தில் இருத்தலியலின் சில போக்குகள், அகத்தன்மை, மனித அனுபவத்தை மதித்தல் கருத்துக்களின் இறுகிப்போன அமைப்பிலேயே முடங்கிவிடாமல் முன்னேக்கிய செயலில் பங்கேற்றல் என்ற பிரச்சினைகளை முன்வைத்துக் கடுமையாகப் போராடின-''

''இப் பிரச்சனைகளிலும் இருத்தலியல் வழங்கிய விடைகள் தவறானவையாகவோ குறைபாடுடையனவாயோ இருக்கக்கூடும்.''

''இப் பிரச்சனைகளை எழுப்பிய முறைகளிலும் வடிவங்களிலும் கூடத் தவறுகள் இருக்கலாம்''.

''ஆயினும், எழுப்பப்பட்ட பிரச்சனைகளின் கூரிய தாக்குதலில் மாக்ஸியம் துவண்டு விடாமல், தன் செழுமையை மீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள வேண் டும் — தன் விமர்சன சுய விமர்சன நோக்கில்.' (ப279) என இறுதியாகக் கூறுகிறார். SVR.

மேற் கூறிய பிரச்சனைகள் இருத்தலியலாளர்கள் மட்டுமே எழுப்பியன அல்ல, தாராளவாதிகளும் பல்வேறு வலதுசாரிகளும் எழுப்பியவைதான். SVR குறிப்பிட மறந்த ஒன்று இருத்தலியலாளர்கள் கேள்விகளை எழுப்பிய நோக்கம் தொடர்பானது. அவர்களது விடைகள் சரியா, தவறு கேள்விகளை எழுப்பிய முறை சரியா, தவறு என்பதை எல்லாம் ஆராயப் புகு முன் அவர்கள் யாரைச் சார்ந்து நின்றார்கள் என்பதையும் நினைவு கூர்வது நல்லது அவர்களது அறிவு விரோதம், மாக்ஸிய விரோதம், விஞ்ஞான விரோதம் எல்லாமே அவர்கள் போதிக்கும் தனி மனித வாதம் சார்ந்தவை. மாக்ஸியத்தின் செழுமை இந்தப் புழுக்கள் அரித்துத் துவண்டு போகுமளவு பலவீனமானதல்ல.

5. 1. இந்நூலில் சில விஷயங்கள் பற்றி மேலும் சொல்லியிருக்கலாம். யாஸ்ப்பேர்ஸ் (Jaspers) ஹைடெக்கரையும் கீக்கெகாட்டையும் போன்றவர்களைவிடச் சிறிது சினேக பூர்வமாக விஞ்ஞானத்தை அணுகினார். யாஸ்ப்பேர்ஸ் ஹைடெக்கர் போன்று நாஜிகட்கு ஊழியம் செய்தவரல்ல. ஆயினும் அவரால் நாஜிக் கொடுமைகட்கு எதிராக மாற்று ஒன்றையுமே தர முடியவில்லை. ஏனெனில் அவரும் வெகுஜனங்களை இழிவாகக் கருதிய ஒருவரே.

5. 2. "Existentialism has risen in Modern Europe because the steadily increasing pressures of **collectivism and abstract idealism** have forced the individual to a resolute and radical self—affirmation.'' என The Existentialist Revolt என்னும் நூலில் இருத்தலியல் உளவியலாளரான றையின்ஹட் (Reinhardt) கூறியுள்ளது கவனிக்கத்தக்கது இருத்தாலியலின் வளர்ச்சியை அமெரிக்க நிறுவனங்கள் ஏன் ஊக்குவிக்கின்றன? இது பற்றியும் SVR எழுதியிருக்கலாம்

5. 3. நீட்ஷேயைப் பின்பற்றிய உளவியலாளரான யுங் (C.G. Jung) நாஜிகளின் ஏவலாளாக வாழ்ந்ததும் நீட்ஷேயின் கருத்துக்களது அடிப்படையில் யூதர்களைக் கீழ்மைப் படுத்துமாறான உளவியற் கருத்துக்களை அவரால் முன்வைக்க முடிந்தது என்பதும் SVR கணிப்பில் எடுத்திருக்க வேண்டியவை அல்லவா!

6. 1. SVR இன் நூல், அவர் விரும்பியோ விரும்பாமலோ, விஞ்ஞானம் பகுத்தறிவு (ஈ.வே.ரா. ரகம் அல்ல) போன்ற விஷயங்கள் மீது பெரும் நம்பிக்கையீனத்தைக் காட்டுகிறது. SVR இன் நம்பிக்கையீனம் ஈ.வே.ரா போன்றோரின் வரட்டு நாத்திகம், விஞ்ஞானிகள் எனப்படுவோர் சிலரின் தத்துவ வறுமை என்பன காரணமானது என்றால் அதை அவர் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். கொச்சையான பொருள் முதல் வாதத்தையும், கொச்சையான விஞ்ஞான அறிவையும் பொருள் முதல் வாதத்துடனும் விஞ்ஞானத்துடனும் குழப்பலாமென்றால் மதங்களின் பெயரால் நிகழும் மோசடிகளை எல்லாம் அவற்றின் சிந்தனைகளுடன் குழப்ப உரிமை உண்டல்லவா!

6. 2. இருத்தலியல் வாதம் எவ்வளவு தூரத்துக்கு இருத்தலியல் வாதிகளது மனித விரோத, பிற்போக்கு சிந்தனைகட்கும் செயல்கட்கும் பொறுப்பானது என்பதை SVR போதுமான அளவு ஆழமாக ஆராயவில்லை அதையும்விடச் சில படு பிற்போக்காளர்கள் பற்றி அவர் மிகவும் மென்மையாகவே நடந்து கொண்டுள்ளார் என்று நினைக்கிறேன்.

6. 3. இருத்தலியல்வாதம் பற்றிய அவரது அணுகுமுறை இருத்தலியலின் தகு

(தொடர்ச்சி 703-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சியவாதிகள் மத்தியில் பண்பாடு தொடர்பான சர்ச்சைகள்

பண்பாட்டை எவ்வாறு மதிப்பிடுவது, விமர்சிப்பது என்பது பற்றி மார்க்சிய வாதிகள் மத்தியில் முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன. அல்தூசர் சிந்தனையும் அல் தூசரைப் பின்பற்றுவோரும் ஒருபுறம். வர லாற்றுய்வாளர் ஈ. பி. தோம்சன், பண் பாட்டு விமர்சகர் றேமண்ட் வில்லியம்ஸ் உட்பட எண்ணிறைந்த பிரிட்டிஸ் மார்க் சியச் சிந்தனையாளர்கள் மறுபுறம். இந்த விவாதம் அடித்தளம்- மேற்கட்டுமானம் (Base super structure என்பதை மையமாக கொண்டு அமைகிறது. மேற்கட்டுமானம் பண்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக் கியது. அடித்தளம் பொருளியல் உறவுகளை யும் அதன் விளைவான வர்க்க உறவுகளை யும் உள்ளடக்கியது. பொருளியல் உறவுகள் தான் இறுதியாக விளங்கும் தீர்மான சக்தி என்பது அல்தூசர் நிலை. கருத்துக்கள், கல்வித்திட்டம், பெரும்பாலான கலைகள் எல்லாம் தமது அதிகாரத்தைப் பாதுகாப் பதற்காக ஆளும் வர்க்கத்தால் கட்டுப்படுத் தப்பட்டுள்ளன. ஆதலால் பண்பாட்டுத் துறையில் சுதந்திரமான சுயவெளிப்பாட்டுக் கான சாத்தியம் இல்லை. என்றுலும் விரல் விட்டு எண்ணக்கூடிய சிறிய தொகையின ரான ஆய்வறிவாளரிடம் ஓரளவு சிந்தனைச் சுதந்திரம் வெளிப்படலாம் (எவ்வாறிருப் பினும் செயலளவில் அவர்களால் சாதிக்கக் கூடியது வரையறைக்கு உட்பட்டதே). அல்தூசரின் இக்கருத்துக்களைக் கல்வித்துறை தொடர்பாக விமர்சித்து விளக்கியவர் போர்டி (Bourdieu). பொருளியல் உறவுகள் வர்க்க அனுபவத்தை 'பெருமளவில் தீர் மானிக்கிறது' என்பதை தோம்சன் ஏற்கின் ருர்.ஆனுல் தனி நபர்களதும் சமூகக் குழுக்க ளினதும் வர்க்க அடிப்படையானதும் பிற வகையினதுமான அனுபவங்களை வெளியிடு வதில் உள்ள வகைப்பாட்டிற்கும் வேறுபாட் டிற்கும் விரிந்த ஒரு – எல்லையை நெகிழ்ச் சியைக்- கொடுக்கின்றுர். தொழிலாள வர்க்கம் அதன் வேலைத்தலத்தில், ஓய்வில், தொழிற்சங்கங்கள் போன்ற ஸ்தாபன நடவடிக்கைகளில் பெறும் வாழ்வனுபவத் தின் பெறுமதிமிக்க உண்மைகள் பொதிந்த தாக இவரின்'the making of the English working class' என்னும் முக்கிய நூல் அமைந்துள்ளது. தோம்சன் கருத்துப்படி வரலாற்றை உருவாக்குபவர்கள் இறுதியாக மக்களே. வரலாற்றை உருவாக்குபவர்கள் மக்கள் அல்லர் என்ற கருத்துக்கு இடம் இல்லை. அல்தூசர் வரலாற்று ஆய்வில் காட் டும் அசிரத்தை குறித்து தோம்சன் தனது கோபத்தைத் தெரிவிக்கிறுர். மார்க்ஸ் சமூக வியல் ஆய்விக்கான ஒரு 'மாதிரியை' (அல் தூசரின் 'வாசிப்பு' விளக்கம், என்பனவற் றின் அடிப்படையில்) கொடுத்துள்ளார் அம் 'மாதிரி' சமூக இயக்கத்தைத் தெளிவுற விளக்க வல்லது. எனவே நிகழ்வுகள் பற்றிய கோட்பாட்டு நெறிசார விளக்கங்களும், பதி வுகளும் மட்டமானவை, அநாவசியமான வை; தோம்சன் எழுத்துக்களும் அவ்வகை யினவே என்பது அல்தூசரின் நோக்கு நிலைப் பட்ட பார்வை. தோம்சனின் முறையை 'Historicism' எனக் கூறி ஒதுக்குகிறுர் அல் தூசர். ஆனுல் தோம்சனும், வில்லியம்சும் பண்பாடு சம்பந்தமான விபரங்கள் கோட் பாட்டு அமைப்புக்களை மாற்ற உதவும் என வும் மார்க்ஸ் கூட இத்தகையதொரு கருத் தை கொண்டிருந்தார் எனவும் நம்புகின் றனர். மேலும் மார்க்சிய மனிதாயவாதிகள் (marxist humanists) என்ற வகையில் மக் கள் எப்படி வரலாற்றை உருவாக்குகின்ற னர் என்பது பற்றி அறிதல், அதன் அளவில் மட்டும் பார்த்தால் கூட, பயனுடையதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கருகின்றனர், இந்த அறிவிற்கு பண்பாடு பற்றி ஆய்வு அவசியம். ஏனெனில் பண்பாடு ஆக்கபூர்வமானது; முன்கூட்டி வரையறுக்க முடியாதது. பண்பாட்டை 'முழுமையான வாழ்முறை பற்றிய ஒன்று' என விளக்கிறுர் வில்லியம்ஸ். அதை அடித்தளத்தின் நேரடி விளைவு என்பதை இவர் ஏற்க மறுக்கிறுர். அடித்தளம் பண்பாட்டு அனுபவம், வர்க்க அனுபவம் ஆகியவற்றை உருவாக்கும் அதேவேளை, தனிநபர்களாலும், சமூகக் குழுக்களாலும் தமது உடனடி வாழ்வின் எல்லையை மீறியும் சிந்தித்தல் இயலும் என்பது இந் நூலாசிரியனின் அபிப்பிராயம். சோஷலிச சமுதாயம் ஒன்று எப்படி இருக்கும் என்று சிந்தித்தல் அப்படியான – வாழ்நிலையை மீறிய நோக்கிற்கு – உதாரணம். அல்தூசரும் தோம்சனும் கருத்து இணக்கம் பெறுவதற்கு இடம் இருக்கிறது. அவர்களது காரமான வாதங்களின் மத்தியில் இவ்விணக்கம் சாத்தியமாகாவிடின் அது வருத்தத்திற்குரிய தொன்றே.

நன்றி—மைக் ஓ டொனல் என்பாரின் A New Introduction to sociology என்னும் நூலின், 532-33ம் பக்கங்களில் உள்ளதன் மொழிபெயர்ப்பு.
தமிழில். க. சண்முகலிங்கம்

○

கவிஞர் ஈழவாணன் திடீரென மரணமாகிவிட்டார் 'அக்னி' என்ற சிறு சஞ்சிகையினைச் சிலகாலமும், 'அக்கினிப் பூக்கள்' என்ற கவிதைத் தொகுதியினையும் வெளியிட்டுள்ளார். இவரது மறைவினுற் துயருறும் குடும்பத்தினருக்கும், நண்பர்களிற்கும்எமது ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(701-ம் பக்கத் தொடர்ச்சி)

## இருத்தலியல்...

திக்கு மீறிய அனுதாபமுடையது. காம்யூ நல்லவர், சார்த்ர் இலட்சியவாத மேதை, ஹைடெக்கர் அந்தியமாதல் பற்றி ஆழச் சிந்தித்தவர் என்பன பண்பாடான அறிமுகங்கள்; ஆனுல் இருத்தலியலை நியாயப் படுத்தப் போதாத நியாயங்கள்.

6. 4. இருத்தலியலாளர்களையும் இருத்தலியலையும் SVR விமர்சித்ததில் அளவும் போதாது தீவிரமும் போதாது. இருத்தலியல் தன் தொடக்க காலம் தொட்டே பிற்போக்கிற்காகப் பணியாற்றி வந்துள்ளது என்பதை இந்த நூல் சுட்டிக்காட்டத் தவறிவிட்டது. இருத்தாலியல் பற்றி என் எண்ணங்களை மாற்ற இந்த நூலால் முடியவில்லை. இந்த விமர்சனத்துக்காக நான் படித்த நூல்கள் என் இருத்தலியல் எதிர்ப்பை மேலும் உறுதிப்படுத்தியுள்ளன.

O

அலைக்கு எமது
வாழ்த்துக்கள்

நவராஜா இன்ஸ்ரியூட்ஸ்
சித்தங்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘எக்சிஸ்டென்ஷியலிசமும்’ - சிவசேகரத்தின் மார்க்ஸியமும்

எஸ். வி. ராஜதுரை

முதலாவதாக, எக்சிஸ்டென்ஷியலிசத் தத்துவம் பற்றித் தானகப் படித்துத் தெரிந்துகொண்ட விஷயம் என்று ஒன்றைக் கூடச் சிவசேகரம் சொல்லவில்லை; பிறகு அதைத் தனக்குத் தெரிந்த மார்க்ஸியத்தின் அடிப்படையில் மறுக்கவும், அதைக் காட்டிலும் வளமான கருத்துக்களை வைக்கவும் இல்லை. இரண்டாவதாக, எனது புத்தகத்திலிருந்து சிலவரிகளை மேற்கோளாகக் காட்டி அவற்றின்மீது தனது கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்கிறார். இந்த வரிகள் யாவும் அவர் கூறும் வியாக்கியானங்களுக்குச் சம்பந்தமற்றவை என்பதை அவற்றை நூலின் அந்தந்த இடங்களில் வைத்துப் படிப்பவருக்குப் புரியும். மூன்றாவதாக எக்சிஸ்டென்ஷியலாளர் வாதங்கள் என்ன நூலாசிரியரின் (எனது) வாதங்கள் என்ன என்பதை நான் தெளிவுபடுத்தவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கிறார். ஒவ்வொரு பந்தியிலும், எனது கருத்து இது, மற்றவரது கருத்து இது என்று கூறி சிரத்தையுள்ள வாசகரின் அறிவுக் கூர்மையை என்னால் இழிவு செய்திருக்க முடியாது.

சிவசேகரத்தின் கட்டுரை, மார்க்ஸிய இயக்கத்தின் வரலாற்றில் ஒருகாலத்தில் தோற்றுவிக்கப்பட்டதும், சில மார்க்ஸியர்களால் (குறிப்பாகத் தமிழ்பேசும் மார்க்ஸியர்களால்) விடாப்பிடியாக இன்னும் பின்பற்றப்பட்டு வருவதுமான போக்கையே எதிரொலிக்கிறது. இந்த இறுகிப்போன பார்வையை சோவியத்யூனியனில் நாற்பதுகளில் ஜடனேவ் தோற்றுவித்தார். ஒரு தத்துவத்தை, அது ‘பூர்ஷ்வா தத்துவம்’, ‘கருத்து முதல்வாதம்’, ‘பிற்போக்கு’ என்று வர்ணிப்பதுடன் விஷயங்கள் முடிவடைந்து விட்டதாகக் கருதுகிறது இப்போக்கு. இது எப்போதேனும் அக் குறிப்பிட்ட தத்துவத்தின் உள்ளடக்கத்தை ‘ஆழமாக’ப் பரிசீலிக்க முயற்சி செய்கிறதென்றால், அது அத் தத்துவத்தைப் பற்றி ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டுவிட்ட பொதுவான மதிப்பீட்டை விவரிக்க ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளைத் ‘தோண்டி’ எடுப்பதுதான். குறிப்பிட்ட தத்துவத்திலுள்ள உடன்பாட்டுவகைக் கூறுகள், எழுப்பப்பட்ட பிரச்சனைகளுக்கு அது தரும் ஓரளவுக்கு உண்மையான தீர்வுகள் ஆகியவற்றை இப்போக்கு முற்றாகப் புறக்கணிக்கிறது. ஏனெனில், இவை, முன்கூட்டியே வகுத்துக்கொள்ளப்பட்ட பொதுவான மதிப்பீட்டில் பொருத்தப்பட முடியாதவையாக உள்ளன. திறனாய்வுக்குட்படுத்தப்பட்ட தத்துவத்தில் உடன்பாட்டுவகையான கூறுகளையும் அது எழுப்பும் உண்மையான பிரச்சனைகளையும் அங்கீகரிப்பதை ‘Objective academism’ என்று ஜடனேவியம் கருதியது எதிராளியின் கருத்துகளை மேற்கோள் காட்டாமலோ அல்லது அதைத் திரித்துக் கூறியோ அவரைத் தாக்குவது என்பது நியதியாகியது. நேர்மையான முறையில் எதிராளியின் கருத்துகளை எடுத்துக்காட்டினால் அது, “எதிராளிக்கு மேடை அமைத்துக் கொடுத்தல்” எனத் தாக்கப்பட்டது. இப்போக்குடன் கொச்சைச் சமூகவியலும் சேர்ந்துகொண்டது. (“இவர் குட்டி பூர்ஷ்வா; எனவே, இவரது சிந்தனையும் இப்படித்தான் இருக்கும்.”) அடையாளச் சீட்டுக்களை எதிராளியின்மீது ஒட்டிவிடுவதே ஜடனேவியத் திறனாய்வுக்குப் போதுமானதாக இருந்தது. தான் ஒரு மார்க்ஸியன் என்ற நினைப்பே ஒருவனை மற்றவர்களைக் காட்டிலும் புனிதமானவனாகவும் உயர்ந்தவனாகவும் ஆக்கிவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இப்போக்கு கருதியது. இப்போக்கு ஆதிக்கம் செலுத்திய சூழலில் நுனிப்புல் மேய்பவர்கள் கொட்டமடித்தனர்.

இத்தகைய போக்கு மார்க்ஸியத்துக்குச் சேவைபுரியக் கூடியதல்ல ; மாருக மாற்றுத் தத்துவங்களுக்கு, குறிப்பாக, பூர்ஷ்வா தத்துவங்களுக்கு எதிரான போராட்டத்துக்கு ஊறு விளைவிக்கவே செய்யும். வெறும் எதிர்மறைத் திறனாய்வு அல்லது வெறும் மறுப்பு (அவதூறு) ஏற்கனவே நமது கூடாரத்தில் இருப்பவர்களின் கைதட்டலைப் பெற்றுத் தரலாம். ஆனல் திறனாய்வு செய்யப்பட்ட கருத்துகளை ஏற்றுக்கொண்டவர்களை, அவற்றின் தாக்கத்துக்கு உட்பட்டவர்களை வென்றெடுக்காது. (விவாதத்தின் குறியிலக்கு இவர்களேயன்றி நமது ஆதரவாளர்களல்லர்). மாற்றுக் கருத்துள்ளவர்களின் படைப்புகளைப் படிக்க முயற்சி செய்யாத, அவர்களைத் திரித்துக் கூறுகிற, அவர்கள் எழுப்பிய பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள இயலாத 'மார்க்ஸிய' விமர்சகர்களுக்கு அவர்கள் கட்டிவைத்துள்ள குட்டி முகாம்களிலிருந்து பாராட்டுகள் வரலாம். இந்த விமர்சகர்கள் தமது அம்புறுத் துணியிலிருந்து எடுத்து வீசுகிற மொண்ணை அம்புகள் எதிராளியின் அல்லது நம்மால் வென்றெடுக்கப்பட வேண்டியவர்களின் முகாமுக்குள் சிறு சலனத்தைக்கூட ஏற்படுத்தாது. மேலும் எதிராளியின் தத்துவத்தைப் பற்றிய ஆழமான, நேர்மையான படிப்பும் ஆய்வும் நம்மால் வழங்கப்படவேண்டிய மாற்றுத் தீர்வுகளும் இல்லாமல் நமது உள்நம்பிக்கைகளை, ஏற்கனவே நாம் ஏற்றுக்கொண்டுவிட்ட கருத்துகளை வலுப்படுத்த முடியாது. எதிர்மறைத் திறனாய்வு இலக்கைத் தவறவிட்டுவிடுகிறது; துவக்கத்திலிருந்தே நமக்குத் தோல்வியை உருவாக்கி விடுகிறது; நமது சிந்தனையை வறட்சிக்குட்படுத்தி அதன் வளர்ச்சியைத் தடுக்கிறது. எதிர்மறைத் திறனாய்வும் கொச்சைச் சமூகவியலும் (இது 'சித்தாந்தம்' பற்றிய மார்க்ஸிய வரைவிலக்கணத்தை மிகவும் எளிமைப்படுத்துகிறது) மாற்றுத் தத்துவங்களில் ஆய்வுக்குரிய பிரச்சனைகள் ஏதும் இல்லை என்று கருதுகின்றன. மார்க்ஸியத்துக்கு வெளியே உண்மையான பிரச்சனை ஏதும் இல்லை என்றும் எந்த ஒரு பிரச்சனைக்கும் ஆக்கபூர்வமான தீர்வு முன்கூட்டியே மார்க்ஸியத்திற்குள் வகுக்கப்பட்டுவிட்டது என்றும் (நடைமுறை உண்மைகளுக்கு மாருக) இத்திறனாய்வு கருதுகிறது. இந்த நிலைப்பாடு மார்க்ஸியத்தை ஆக்கபூர்வமாகப் புரிந்துகொள்வதிலிருந்து தோன்றுவதல்ல ; மாருக அதை வரட்டுத்தனமாகத் திரிப்பதிலிருந்தும் வாய்ப்பாடுகள் மூலமாக மார்க்ஸியத்தைக் 'கற்றுக்கொள்ள' முயற்சிப்பதிலிருந்தும் தோன்றுவதாகும். எனவே இது வலிமையின் அறிகுறியல்ல ; வலுக்குறைவின் அடையாளமே.

காலஞ்சென்ற பேராசிரியர் வானமாமலை போன்றவர்களால்கூட இப்போக்கில் இருந்து விடுபட முடியவில்லை. அதனுல்தான், சார்த்தருக்கும் ஃப்ராய்டிற்கும் சம்பந்தம் இல்லை, சார்த்தர் கவிஞரல்ல என்ற சாதாரண உண்மைகள் கூட நா. வா.வுக்கு அவசியப்படவில்லை. எனவேதான், "ஜீன் பால் சார்த்ரே என்ற புகழ்பெற்ற பிரஞ்சுக் கவிஞர்" என்றும், அவர் ஃப்ராய்டிய இணை விழைச்சுக் கொள்கையை ஏற்றுக்கொண்டவர் என்றும் ஒருமுறை எழுதினர். "Existentialism என்ற பிரெஞ்சுமொழிப் பதம்' என்று சிவசேகரம் எழுதுவதும் இப்போக்கின் விளைவாகத்தான்.

"இருத்தலியல் என்வரையில் ஒரு பிற்போக்குச் சித்தாந்தமாக இல்லாதவிடத்து ஒரு உதவாக்கரை ஆய்வுமுறை என்ற எண்ணமே இருக்கிறது" என்றும், "இவ்விஷயத்தில் என்னுல் என் அரசியல் நிலைப்பாட்டையும் சிந்தனைச் சார்பையும் தாண்டிச் செல்வது மிகவும் சிரமமான காரியம்" என்றும் சிவசேகரம் கூறுவது இப்போக்கின் விளைவாகத்தான்.

எனது அனுதாபம் இருத்தலியலாளர்கள் எழுப்பிய பிரச்சனைகள் மீதுதான், அவர்களது தீர்வுகள் மீதல்ல என்பதையும் அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனைகள் ஒவ்வொன்றுக்கும் மார்க்ஸிய நோக்கில் மாற்றுத் தீர்வுகள் தரப்பட்டுள்ளன என்பதையும் எனது நூலைக் கவனமாகப் படிப்பவர்களுக்குப் புரியும். அப்படியிருக்க, இந்த "நூலை எழுதிய நோக்கம் மார்க்ஸிய எதிர்ப்போ மார்க்ஸியத்துக்கு மேலாக இருத்தலியலை நிலைநாட்டுவதோ இல்லை" என சிவசேகரம் கூறிவிட்டு அதே மூச்சில் நான் "இருத்தலிய நாஜிக்களிடம் பரிவு காட்டுவதாக" எழுதுவது முன்னுக்குப்பின் முரணானது.

"கீர்க்கேகார்ட், மார்க்ஸ் இருவருக்குமிடையில் எல்லா இருத்தலியலாளர்களையும் நிறுத்திவிட முடியும். இதன் பொருள் இருவரும் ஒரே துவக்க முனையில் புறப்பட்டு வெவ்வேறு திசைகளில் சென்றனர் என்பதுதான்" என்று நான் எழுதியிருப்பது இருத்தலியல் மீது மார்க்ஸியத்துக்கு மேலான எத்தகைய அனுதாபத்தைக் காட்டியுள்ளது? தத்துவச் சிந்தனைகளை ஒற்றைப் பரிமாணத்தில் அடுக்குகிறேன் என்ற சிவசேகரத்தின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. இப்படி அடுக்க முடியாது என்பதற்காகத்தான் புத்தகத்தின் ஆரம்பத்தில் பல பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. முற்போக்கு / பிற்போக்கு என்ற ஒற்றைப் பரிமாணம் சிவசேகரத்தின் அணுகுமுறைக்கு மட்டுமே உரியது.

"ஹைடெக்கர் என்கிற ஹிட்லரின் அடிவருடி" என்ற சொற்களும், "அடினூர் காலத்தில் புனர்வாழ்வு பெற்றவர்" என்ற ஒற்றைவரித் தகவலும் சிவசேகரத்தின் மார்க்ஸியத்துக்குப் போதுமானவை. ஆனால், ஹைடெக்கர் என்ற சிந்தனைவாதி எழுப்பும் பிரச்சனைகளிலிருந்து கோழைத்தனமாகப் பின்வாங்குவது மார்க்ஸியத்துக்கு உடன்பாடானதல்ல. இப்படிக் கூறுவதாலேயே, "நாஜி ஆதரவாளன்" என்ற பட்டத்தை நான் பெறக்கூடும். "ஹைடெக்கரின் சிந்தனையை மார்க்சுக்கும் கீர்க்கேகார்ட்டுக்கும் நடுவில் எங்கே நிறுத்தலாம்?" என்ற சிவசேகரம் கேள்விக்குக் கட்டாயம் ஒரு பதில் வேண்டுமென்றால் அது இதுதான். "கீர்க்கேகார்டுக்குப் பக்கத்தில்!"

"இந்த இருத்தலியல் யாருக்கான தத்துவம் என்ற கேள்விக்கும் அதை யார் எதற்குப் பயன்படுத்துகிறார்கள் என்ற கேள்விக்கும் 'முற்போக்கு' அணியினர் தரும் பதில் (தவறான காரணங்கட்காக இருப்பினும்) சரியான ஒன்றாகவே இருக்கிறது." இப்படிக்கூறும் சிவசேகரத்துக்கு மாறான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள பல முற்போக்காளர்களை, மார்க்ஸியர்களை நான் மேற்கோள் காட்டமுடியும். எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் மார்க்ஸியரும், உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியும், கீழ்த்திசையியலாளரும், மக்கள் சீனத்தின் நெருங்கிய நண்பருமான ஜோசப் நீதாமின் கூற்று இது:—

"காலம், புத்துணர்வூட்டும் நீரோட்டம்" என்ற புத்தகம் பற்றி நான் முன்பு குறிப்பிட்டேன். கடந்த உலகப்போரின் துவக்கத்தின்போது அது வெளியிடப்பட்டது. அந்த நூலுக்கு நான், சுயசரிதை உள்ளடக்கத்துடன்கூடிய சுய-மதிப்பீடு அல்லது சுய—விமர்சன வடிவத்திலான அறிமுகம் ஒன்றை எழுதினேன். அது இன்றைக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது. அனுபவ வடிவங்கள் அனைத்தையும்விட, அறநெறிகளே மேலானவை என்பதை அங்கீகரித்த என் அறிமுகக் கட்டுரை, அறநெறிகளை நடைமுறைப் படுத்துவதே அரசியல் என்பதை ஏற்றுக்கொண்டது. அறநெறிகளும் அரசியலும் 'வெவ்வேறு வடிவங்களை ஐக்கியப்படுத்தும் சக்தி' என்று நான் கருதினேன். இப்படிப்பட்ட சிந்தனையில், அரசியலுக்குள்ள முதன்மை என்பது சக்திவாய்ந்த அடிப்படை அம்சமாக இருந்தபோதிலும், அனுபவ வடிவங்களை, தனிமனிதனின் வாழ்வு, செயல் ஆகியவற்றை மட்டும் பொறுத்தவரை, ஐக்கியப்படுத்தும் சாத்தியப்பாடு என்பது தேர்வை உள்ளடக்கிய வாழ்வைச்சார்ந்ததாகவே தோன்றுகிறது. எனவே பின்னோக்கிப் பார்க்கையில், எனது உலகக் கண்ணோட்டம், சோரன் கீர்க்கேகார்ட், கார்ல் யாஸ்பர்ஸ், காப்ரியல் மார்செல், எம்மானுவேல் மோனியே ஆகியோரின் உலகக் கண்ணோட்டத்துடன் — ஏன் ழான் பவுல் சார்த்தரின் உலகக் கண்ணோட்டத்துடனும் என்றும் சொல்லலாம்—அடையாளம் கண்டுபிடிக்கும் வகையில் பலவிதங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் ஒத்ததாகவே இருந்தது, அவர்களில் எவரொருவரது நேரடியான செல்வாக்குக்கும் நான் உட்படாவிடினும், கீர்க்கேகார்ட்பற்றி H. J. பிளாக்ஹாம் எழுதியுள்ளார்: ''குழப்பம், தவறு, முயற்சியைத் தவறானதிசையில் செலுத்துதல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கான ஒரேவழி, அறிவு சார்ந்ததையும் அழகியல் சார்ந்ததையும், அறநெறி சார்ந்ததையும் சமயம் சார்ந்ததையும் தனித்தனியாக அவற்றுக்கே உரிய தளங்களில் வைத்திருப்பதும், தனிமனிதனின் நடைமுறை வாழ்வில், அதாவது எங்கு இவற்றின் ஐக்கியம் சரியான முறையில் காணப்படுகிறதோ, அங்கு இந்த ஐக்கியத்தை ஏற்படுத்துவதுமாகும்; இந்த ஐக்கியம் அறநெறியின் ஆளுகையின் கீழேயன்றி வெறும் சிந்தனை என்ற அருவத்தின் கீழல்ல. அறிவின் ஆளுகையின் கீழல்ல.'' கீர்க்கேகார்டே கூறியதுபோல ''அறநெறி தனிமனிதனின்மீது கவனம் குவிக்கிறது. ஒரு தனி மனிதன், தான் அறநெறிரீதியாக முழுமையான மனிதனாக உருவாவது அவனது கடமையாகும்: ஒவ்வொரு மனிதனும் அறநெறிரீதியாக முழு மனிதனாகும் வகையில் பிறந்துள்ளான் என்பதால் அவ்வாறு அவன் ஆகமுடியும் என்பது அறநெறி ரீதியான முன்நிபந்தனை என்பது போல.'' ஒருவேளை இது நம்பிக்கைமிகுந்த கூற்றாகஇருக்கலாம். ஆனால் மற்றோரிடத்தில் அவர் எழுதினார்: ''சிந்தனையானது 'கற்பனை'யை மட்டம் தட்டினால் கற்பனை தன் பங்குக்குச் சிந்தனையை மட்டம் தட்டுகிறது; அதேபோல சிந்தனை உணர்ச்சியை மட்டம் தட்டினால் உணர்ச்சி சிந்தனையை மட்டம் தட்டுகிறது. நாம் செய்யவேண்டியது, ஒன்றைத் தாழ்த்தி மற்றொன்றை உயர்த்துவதல்ல, மாறாக அவற்றுக்கு சம அந்தஸ்து கொடுத்து, அவற்றை உடனிகழ்வாக ஐக்கியப்படுத்துதல்தான்; அவற்றை ஐக்கியப் படுத்தும் ஊடகம் வாழ்க்கைதான்.''

மேலும் யாஸ்பர்ஸ் சொன்னதுபோல் வாழ்தலின் மூலமே வெல்லப்படக்கூடிய தொடர்ச்சியின்மைகளாக வாழ்வுநிலை பிளவுபட்டுள்ளது. சிந்தனையினால் மட்டுமே விளக்கக்கூடிய, எல்லோருக்குமே பொதுவானதும் ஒரே தன்மையுடையதுமான ஒரு கட்டமைப்பைத் தேடுவது பாமரத்தனமானது.

''நவீன மனிதனுக்கு ஏற்பட்டுள்ள அந்நியமாதல் என்ற கடுமையான நோய்பற்றி இருத்தலியலாளர் தெரிவிக்கும் கருத்துகள் அனைத்துடனும் எனக்கு உடன்பாடு உண்டு என்று நான் நருதவில்லை. இக்கருத்தாக்கத்துக்கு நியாயம் செய்ய நான் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தவேண்டும்; எப்படியிருந்தாலும் அதைப்பற்றிச் சிறப்பாக எதனையும் சொல்லமுடியாத அளவுக்கு எனது வயதும் ஆகிவிட்டது. ஆனால் புறஉலகில் இருந்து அந்நியமாதல் என்ற உணர்வு பயங்கரமானது: இது எந்த சமுதாயத்தில் ஒருவர் வாழவேண்டுமோ அச்சமுதாயத்தில் இருந்து அந்நியமாதல், தனது உழைப்பிலிருந்தும் பணியிலிருந்தும் அதன் விளைபொருளிலிருந்தும் தனது சமுதாயத்தின் மதிப்பீடுகளிலிருந்தும், தன்னிடமிருந்துமே அந்நியமாதல் ..... எவரையும் அந்நியமாக்கி விடுவதற்கு இன்றைய உலகமே போதுமானது.

''ஒரு கருத்து முதல்வாத வடிவத்தில் உலகின் பரிணாம வளர்ச்சி பற்றிய கண்ணோட்டத்தையும் புரட்சிபற்றிய கருத்தாக்கத்தையும் கொண்டிருந்த ஹெகலின் தத்துவம் 1844-ம் ஆண்டில் கீர்க்கேகார்ட், மார்க்ஸ் ஆகிய இருவரின் தாக்குதலுக்கும் உள்ளாயிற்று. இருவருமே ஹெகலின் அறிவுவாதத்தை நிராகரித்தனர். கீர்க்கேகார்ட்டைப் பொறுத்தவரை பல்வேறு அம்சங்களின் சங்கமம் ஒவ்வொரு தனிமனித ஆளுமையிலும் சாதிக்கப்படுவதே வாழ்வுக்குரிய ஒரே அர்த்தமாக இருந்தது. ஆனால், அதற்கு மாறாக, மார்க்ஸுக்கோ தனிமனிதனில் உணர்வில் ஏற்பட்டுள்ள உள்நெருக்கடிகள், வர்க்கங்களாகப் பிளவுபட்டுள்ள ஒரு சமுதாயத்தின் சிக்கல்களின் பிரதிபலிப்புத்தான். கீர்க்கேகார்டின் கருத்து தவறானதல்ல என்றும் மார்க்ஸின் கருத்தோ மேலும் சரியானது என்றும் நான் கருதுகிறேன்.''

(Joseph Needham, 'Moulds of understanding-A Pattern of Natural Philosophy' George Allen and Vnwin Ltd., London *(1976, pp271-273)* -அழுத்தம் என்னுடையது

(அடுத்த இதழில் முடியும்) O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்

அ. யேசுராசா

கந்தையா நடேசன் என்ற 'தெணியான்' 'மல்லிகை'யில் எழுதிய 'இலங்கை முற்போக்கு இலக்கியமும் அதன் எதிரணியினர்களான மரபுப் பண்டிதர்களும், மார்க்ஸிஸப் பண்டிதர்களும்' என்ற கட்டுரையில் தாழ்வுச் சிக்கலினுல் உருவாகிய அவரது நவீன சாதி உணர்வே, வெளிப்பட்டது. அக் கட்டுரை தொடர்பான வேறு சிலரின் கருத்துக்களிற்குப் பதிலளிக்குமுகமாக ஒரு வருடத்தின் பின் அவர் எழுதிய 'ஆனை பார்த்தவர்களுக்காக அனுதாபப் படுகிறேன்' என்ற கட்டுரையிலும், மற்றவர்களையெல்லாம் மட்டந்தட்ட முயலும் அவரது அசட்டு அகம்பாவத்தைத் தவிர உருப்படியான வேறொன்றையும், காண முடியவில்லை. ''தனது எழுத்துக்களுடனேயே முரண்பட்டுக் குழம்பிக்கொண்டிருக்கும் நடேசன்'' என்று மிகச் சரியாகத்தான், தனது கட்டுரையில், என். கே. ரகுநாதன் குறிப்பிடுகின்றுர். 'விளங்காத மேற்கோளும் விளங்க மறுத்த உண்மையும்' என்ற கட்டுரை (மல்லிகை, ஜனவரி–1984) நடேசனினது வாதங்களினது நொய்மையினைச் சுருக்கமாயும், சிறப்பாயும் அம்பலப்படுத்துகிறது. அதை எழுதிய அ. விந்தன் ''க. ந. வின் கற்பனுவாத அடித்தளத்தைப் புரிந்து கொண்டால் அவருக்காக அனுதாபப்படுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்றும், ''இ. மு. எ. சங்கமும், கா. சிவத்தம்பியும் க. ந. வின் புதிய சாதிவாதத்திற்குப் பதிலிறுப்பார்களென விசுவாசிப்போமாக'' என்றும் எழுதியிருப்பவை முக்கியமாய்க் கவனத்திற் கொள்ளத்தக்கவை. இந்தப் புதிய சாதிவாதம் பற்றிய கருத்து, 1975 கார்த்திகையில் வெளிவந்த அலையின் முதலாவது இதழிலும் குறிப்பிடப்பட்டுள்ளமை முக்கியமானது. ஈழத்து இலக்கிய வரலாற்றின் ஒரு கட்டத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வைத் திரித்துக்காட்ட கந்தையா நடேசனை உந்தியது, இந்தச் சாதி உணர்வே. தன்னைக் கொம்யூனிஸ்ற் என்று சொல்லிக் கொள்ளும் இவர், 1977 பொதுத்தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான த. இராஜலிங்கத்தை, அவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக வெளிப்படையாகவே ஆதரித்து வேலை செய்ததையும் இங்கு கவனிக்க வேண்டும்.

த. கலாமணி என்பவரும் ''மரபுப் போராட்ட காலத்தில் 'முற்போக்கு இலக்கியங்கள் யாவும் இழிசனர் இலக்கியங்கள்' என்று ஒலித்த குரலின் மாற்றுக் குரலாக, 'முற்போக்கு இலக்கியங்களில் கலைத்துவம் அல்லது கலை நயம் இல்லை' என்ற புதுக் குரல் அண்மைக்காலங்களில் ஒலிக்கத் தொடங்கியிருந்தது. 'டானியலின் எழுத்துக்கள் பஞ்சப்பட்டவர்களின் வரலாற்று ஆவணங்கள்' என்ற வகையில், பஞ்சப்பட்ட மக்களாலும் ஈழத்து இலக்கிய உலகாலும் மறக்கப்பட முடியாதவராகவே டானியல் விளங்கப் போகிறுர். இதனுலேயே டானியலின் எழுத்துக்கள்மீது எதிர்க் குரல் கொடுப்போரையிட்டுச் சந்தேகம் கொள்ள வேண்டியும் உள்ளது.'' [மல்லிகை, நொவம்பர்–1983. பக். 13] என்று எழுதுகையில் மோசமானதொரு தர்க்கத் தடத்தில் நகர்ந்து செல்கிறுர். இதன் மூலம், டானியலது படைப்புக்களின் பலவீனங்களைச் சுட்டிக் காட்டும் யாரும் சாதி வெறியர்களே என்பது மாதிரியாக, இந்தப் புதிய சாதிவாதம் மோசமானதொரு கட்டத்தை அடைகிறது. சிறிது காலத்தின் முன்னர் 'எழுதுமட்டுவாளில்' தாழ்த்தப்பட்ட சமூகச் சிறுவர்கள் சிலரின் பாடப் புத்தகங்கள் சாதிவெறியர்களினுல் நெருப்பிலிடப் பட்டதைக் குறிப்பிட்டுவிட்டு, 1981ல் அரசுப் பயங்கரவாதிகளினுல் யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தை அதனுடன் சமப்படுத்தி கே. டானியல் அமைதி காண்பதும், (இலங்கையிலிருந்து ஓர் இலக்

கியக் குரல்) இந்த உணர்வினாலேயாகும். மேலிருந்தோ கீழிருந்தோ வரும் சாதி உணர்வு, சாதி வெறி, சாதி ஒடுக்குமுறைகள் எதுவுமே பிற்போக்கானவை, கண்டிக்கத்தக்கவை. குறைந்த பட்சம் ஒரு 'மனிதாயதவாதி'யாக இருந்தாற்கூட இச் சாதிச் சிக்கலிலிருந்து விடுபட்டு விடலாம். ஆனால் தங்களை முற்போக்காளர், கொம்யூனிஸ்ற்றுகள் என்று சொல்லிக்கொள்பவர்களே இச் சிக்கலிலிருந்து விடுபடாதிருப்பதையும், பிறழ்வான கருத்துக்களைத் தெரிவித்துக் குழப்புவதையும் நாம், எவ்வாறு புரிந்துகொள்வது?

o o

சாஹித்திய மண்டலப் பரிசளிப்பு மூடிய அறைக்குள், 'கட்டுக்காவலுடன்' நடைபெற்றது. 'தமிழ்க் கலைக்கும் கலாசாரத்துக்கும் அரசு பெரும் கௌரவம் அளித்துள்ளது. என ஊதுகுழற் பத்திரிகைகளும், சில அடிவருடிகளும் புலம்பியுள்ளனர். தமிழ்த் தேசிய இனத்தின்மீது மென்மேலும் ஒடுக்கு முறைகளைக் கட்டவிழ்த்து வரும் அரசு அந்த இனத்தின் கலை, கலாசாரத்தைமட்டும் கௌரவிக்கிறது என்பதை நாம் நம்ப வேண்டுமாம்! இதை விட்டாற்கூட 1977–1981 வரையிலான ஐந்தாண்டுகளுக்குரிய பரிசுகளை 1984 ல் வழங்குவதிலிருந்தே கௌரவிக்கும் இலட்சணம் விளங்குகிறதே! இதைவிட முக்கியமானது, பரிசுக்குரியதெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு நூல்களை வெளியிட்ட 'வைகறை வெளியீட்டாளர்கள், இருவரையும், மனித உரிமைகளிற்கு விரோதமானதென உலகெங்கும் கண்டிக்கப்பட்ட சட்டமொன்றின்கீழ்க் குற்றஞ்சாட்டி ஒன்றரை வருடத்துக்குமேல் தடுத்து வைத்தபடியே, அவர்களது நூல்களிற்கு பரிசு வழங்கும் வேடிக்கை. ஒரு வருடத்தின் முன்பு இப் பரிசு முடிவுகள் அறிவிக்கப்பட்ட போதே இக் கொடுமையைக் கண்டிக்கு முகமாக சாஹித்தியப் பரிசுகளைப் பகிஷ்கரிக்குமாறு எழுத்தாளர்களைக் கோரும் அறிக்கை ஒன்றினை, ஒன்பது கலை, இலக்கிய அமைப்புகள் சேர்ந்து வெளியிட்டன. (அதில் ஒன்றான 'தேசிய கலை, இலக்கியப் பேரவை' தமக்கே உரித்தான 'இடது' குத்துக்கரணமொன்றை அடித்துப், பின்னர் நழுவியது) பொது மக்கள் மத்தியிலும், இலக்கிய ஆர்வலர்களிடையிலும் இதற்கு ஆதரவு வெளிப்பட்ட போதிலும், பரிசு எழுத்தாளர்களிற் பெரும்பாலோர் வெட்கங் கெட்டமுறையில், மௌனமே சாதித்தனர். 'எங்கடை எழுத்தாளர்கள்' என்று எப்போதும் ஆக்ரோஷிக்கும்!) டொமினிக்ஜீவா, மல்லிகை கூட மௌனமே சாதித்தனர். பரிசு பெற்ற வைகறை வெளியீடுகளில் ஒன்றான 'நாமிருக்கும் நாடே' நூலின் ஆசிரியர், பெண்கள் பெயரில் மறைந்து தான் எழுதிவரும் 'பத்தி'யில் [ திரேசா–சியாமளா குறிப்புக்கள். தினகரன் வாரமஞ்சரி] பரிசுத்தொகை ஆயிரம் ரூபா போதாதென்று மட்டுமே அழுதிருந்தார். இன்னொரு எழுத்தாளர் பரிசளிப்பு வைபவத்தில் ''அடுத்தமுறை பரிசுத்தொகை ஐயாயிரம் ஆக்கப்படும்'' என்ற அமைச்சரின் குறிப்பைக் கேட்டதும் ''ஐயோ! அப்பிடியெண்டால் அடுத்தவருசம் எங்களுக்குப் பரிசு தரலாமே'' என்று ரொம்பவும் அங்கலாய்த்தாராம்! தமிழ்நாட்டு சுஜாதா, இந்துமதிகளையும்; புஷ்பா தங்கதுரைகளையும் வியாபார எழுத்தாளர்களெனக் கிண்டல் பண்ணத், தயங்காத இந்த 'சமூகப் பிரஞ்ஞை கொண்ட' (!) எழுத்தாளக் கும்பல், பாரதியின் சொற்களில் 'வாய்ச் சொல்லில் வீரராயும்' 'சொந்தச் சகோதரர் துன்பத்திற் சாதல் கண்டும் சிந்தை இரங்காதோராயுமே' தாம் உண்மையில் இருப்பதை காட்டிக்கொண்டு விட்டனர். இவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் என்ன பயன்? வேண்டாம்! மலையாளக் கவிஞனும், கொம்யூனிஸ்ற்றுமான கடம்மனிட்ட ராமகிருஷ்ணனின் கவிதை வரிகள், எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆகவே நாம் பூசணிக்காயைப்பற்றிப்
பேசலாம்.
இந்த முறைகெட்ட பூமியைப் பற்றி
நினைத்தும் பேசியும் சோர்ந்தேன்.
ஊதாரிப்பிள்ளைகள் திரும்பி வருவதைக்
காணக்
காத்திருந்த கண்களில் பீழையடைந்து
திரையிறங்கியது.
'இந்தப் பூமியின் அச்சு
இற்றதென்றும் கறையான் அரித்த
தென்றும்'
யாரோ சொன்னார்கள்
கழற்றிப் பரிசோதிக்க
நேரமும் கிடைப்பதில்லை
பழகித் துகளானதென்றால்
மாற்றிப்
புதியது போடணும்,
அப்போது தெரியலாம் சுயரூபம்.
வெடித்துச் சிதறிய கட்டிகளும்
தலையோடுகளும்
மௌனமாகின்றன.

எதற்கும் தயாரில்லையென்றால்
அச்சொடிந்து போகட்டும்
அழுகிய முட்டைபோல இந்தப்
பூமி உடையட்டும்.
அல்லதோர் அசையா ஓவியம்போல்
மரத்துப் போகட்டும்
அதை அதன் பாட்டில் விட்டுவிடலாம்.

நாம் பூசணிக்காயைப்பற்றிப் பேசலாம்:
பூசணிக்காய் பூமியைப்போல்
உருண்டையானது......"

o

---

மனிதன் சஞ்சிகை இயக்கத்தில் முக்கிய பங்காற்றிய அ. விமலதாசனின் மரணம் ஆழ்ந்த துக்கத்தினையும், இழப்பினையும் ஏற்படுத்துவதொன்று. 'அலை'யின் முதலிதழின் வெளியீட்டு விழா முடிந்து யாழ் நகர்க் கடையொன்றில் நண்பர்களுடன் தேநீர் அருந்திக் கொண்டிருக்கையில், தானாக வந்து ஒரு பிரதியை வாங்கிக் கதைத்ததில் அவருடன் அறிமுகம் ஏற்பட்டது. அப்போது அவர் யாழ் வளாக மாணவராயிருந்தார். பின்னர், விஞ்ஞானப் பட்டதாரியாகி வெளியேறிக் கொழும்பில் கடமையாற்றிய வரை அடிக்கடி அவருடன் தொடர்பு இருந்ததில், அவரை நன்கு புரிய முடிந்தது. தேசிய இனச் சிக்கல், சமூக விடுதலை, கலை இலக்கியத் துறைகள் போன்றவற்றில் அவருக்கு நிரம்பிய ஈடுபாடு இருந்தது பெரும்பாலும், இத் துறையிலான 'அலை' யின் கருத்துக்களுடன் அவருக்கு உடன்பாடுமிருந்தது. பின்தங்கிய சமூகப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுதல், சமூக ஆய்வுகள் என்பவற்றிலும் அமைப்பு ரீதியாக இயங்கினார். சிங்களப் புத்திஜீவிகளிடையில் தமிழர் பிரச்சினையை விளங்குவதில் பிற்காலத்தில் கூடிய அக்கறை காட்டினார். எங்கும் எவரிடமும் தனது கருத்துக்களைத் தயங்காது வெளிப்படுத்தும் பண்பு அவரிடம் இருந்தது.

தற்புகழ்ச்சி, சுயநலம் சிறிதளவும் இல்லாத — தியாகமும், அர்ப்பணிப்பும் நிறைந்த வாழ்வு அவருடையது. தனது வாழ்வின் மூலம் 'கிறீஸ்துவின் செய்தியை'க் கொண்டு செல்வதில் நம்பிக்கை கொண்டிருந்த அவர் 'நீதியின் நிமித்தம் உபத்திரவப்படுதலை' எப்போதும் ஏற்றுக் கொண்டிருந்தார். அந்த விதத்தில் 24-7-83ல் நிகழ்ந்த அவரது மரணமும், பேரினவாதத்தினால் நிகழும் அவலங்களிற்குச் சாட்சியாகி அதை அம்பலப்படுத்துமொன்றாயே அமைந்தது.

வாழ்நாளில், அறிந்தவர்களெல்லோராலும் மதிப்புடன் நேசிக்கப்பட்ட அவர் மரணத்திலும் நினைவு கூரத் தக்கவரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. க அருமைநாயகத்தின்
### மரணம் இழப்பினை ஏற்படுத்துகிறது

வரலாற்றுச் சிறப்புப் பட்டதாரியான இவர், இலங்கைத் தமிழ்த் தேசிய வாதத்தினைச் சரியாகப் புரிந்துகொண்ட ஒருவர். 19-ம் நூற்றுண்டு இலங்கை வரலாற்றின் சில பகுதிகளை நேர்மையாக எழுதிய வரலாற்றுய்வாளர். அக்கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய அரசாங்க அதிபர்களின் சேவைக் குறிப்புகளையெல்லாம் அலசி ஆராய்ந்து, வரலாற்றுக் குறிப்புகளை அன்றைய சமூகப் பழக்கவழக்கங்களுடன் ஒன்றிணைத்துப் பல கட்டுரைகளைத் தந்துள்ளார். இலங்கை வரலாற்றில் தமிழர்பற்றிய பகுதிகள் பலவழிகளிலும் திரித்து எழுதப் பட்டிருப்பதைக்கண்டு வரலாற்று மாணவனென்ற முறையில் வருந்தியதுமட்டுமல்லாது, பல ஆசிரியர்களின் வரலாற்று நூல்களை விமர்சித்ததன்மூலம் உண்மைகளை நிறுவவும் பாடுபட்டார். யாழ்ப்பாணத்தின் சாதி அமைப்பு என்ற இவரது கட்டுரை முக்கியத்துவம் வாய்ந்தது. இதே தலைப்பிலான இவரது விரிவான ஆய்வு எம். ஏ. பட்டத்துக்காக யாழ். பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1966-ல் கொழும்பு வளாகத்தில் வரலாற்று விரிவுரையாளராக இருந்த போது, வரலாற்றைத் தமிழில் கற்கச் செய்வதில் முக்கிய பணியாற்றினுர்: இந்த விவகாரந் தொடர்பாகவே அங்கு நிரந்தரமாக்கப்படாமலும் விடப்பட்டார்.

1983 ஜுன் — ஜுலைக் காலங்களில் சேர் பொன். அருணுசலத்தின் அரசியற்றுறைக் கையெழுத்துப் பிரதிகளையும், வரலாற்று முக்கியம்நிறைந்த ஆவணங்கள் பலவற்றின் மூலப்பிரதிகளையும் ஆராய்ந்து கொண்டிருந்தார். 25-7-83 அன்று 80,000 ரூபாவிற்குமேல் பெறுமதிவாய்ந்த அவரது புத்தகங்களும், அரிய வரலாற்றுச் சுவடிகளும் பேரினவாதிகளால் எரிக்கப்பட்டன. இந்த இழப்பினுல் மனம் வெதும்பி விதுர்விதித்த நிலையில் சரஸ்வதி மண்டப அகதிகள் முகாமில் இருந்த போது, '' இத்துடனுவது விட்டார்களே ; சந்தோஷம் '' என்று கூறிக்கொண்டிருந்தார்.

29—7—83இல் நண்பர்கள் சிலரின் வேண்டுதலிற்கிணங்கி அகதி முகாமிற்கு வெளியிற் சென்றிருந்தபோது, பேரினவாதிகளால் மரணமடைந்தார்.

அவரது பணிகள் அவரது நினைவை நிலைநிறுத்தும்.


'அலை'க்கு எமது வாழ்த்துக்கள்

**ஐ. என். எஸ்.**

102|10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றஸ்ரன் — லீஸ்ரர் — ஜன்மார்

ஆகிய

டீசல் என்ஜின்களின் உதிரிப்பாகங்களை

உங்கள் தெரிவுகளுக்கு ஏற்ப

பழையதும், புதியதுமாகப் பெற்றுக்கொள்ள

## தர்சன் மரைன் மோட்டோர்ஸ்

உரிமையாளர் : T. யேசுநாயம்

தர்சன் மரைன் மோட்டோர்ஸ்

புதிய சின்னக்கடை மேல்மாடி,

குருநகர், யாழ்ப்பாணம்.

அன்றாடம் பாவனைக்குத் தேவையான

**உணவுப் பொருட்களை**

மொத்தமாகவும், சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள

## குருநகர்

## டிரேட் சென்ரர்ஸ்

இல. 60, புதிய சந்தை மேல்மாடி,

குருநகர், யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான

அறக்கொட்டியான்<br>நைலோன்<br>சூடை } வலைகள்

நைலோன்<br>குறுலோன் } நூல்கள்

மற்றும்

சகலவித மீன்பிடி உபகரணங்களை

சகாய விலையில்

பெற்றுக்கொள்ளலாம்.

## சாளி கொணி

## CHARLEY CONI

50, புதிய சந்தை மேல்மாடி,

குருநகர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொகுசான சேவை — சௌகரியத்துடன்!

பவிசான பயணம் — பண்பான உபசரிப்புடன்!

# V. J. S. — C. J. S. T.

உலகப் புகழ்பெற்ற மக்கிறுன்ஸ் சேவையும் கூட

நாடவேண்டிய நம்பிக்கையுடன்

கூடிய முகவரி

# ஸ்ரீமகள் ரேடர்ஸ்

158, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 23572


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS OF

# PL. SV. SEVUGAN CHETTIAR

No. 140, ARMOUR STREET,

COLOMBO — 11

DEALERS IN:

**TIMBER, CHIP BOARD,**
**PLY WOOD,**
**WALL PANELLING,**
**PLY WOOD DOORS**
**ETC.**

T. GRAMS: **WISDOM** PHONE: **24629**

யாழ்ப்பாணம் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு 'அலை' இலக்கிய வட்டத்தினரால் (48, சுய உதவி வீடமைப்புத்திட்டம், குருநகர், யாழ்ப்பாணம்) 31-3-84ல் வெளியிடப்பட்டது.
இணையாசிரியர்: மு. புஷ்பராஜன், அ. யேசுராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org